d. M. 1803. APRIL 1928 Vol. V—No 9.

லக்ஷ்மி



சொந்தக்காரர்கள்:
கே. எஸ். முத்தையா & கோ., சென்னை.

வருட சந்தா உள்நாடு ரூ. 2. வெளிநாடு ரூ. 2 8

அமெரிக்கன் சில்க் — — — — — அங்கவஸ்திரம்

தூய்ய வெள்ளை, உடல் திக்கானபட்டு; தினசரி துவைத்து உபயோகிக்கலாம். வண்ணானுக்கும் போட்டு சலவை செய்யலாம். இருபக்கங்களிலும் அழகான குஞ்சம் கட்டியது. 5 முழ நீளம் 40'' அகலம்.

விலை ரூ. **6—8—0** தான்

கிடைக்கவில்லையே ! என்று வருந்தவேண்டாம். ஏற்கெனவே 70 நாட்களில் 5000 பட்டுகளுக்கு மேல் செலவாகியும், ஆர்டர்கள் இன்னும் குறைந்தபாடில்லை. ஒன்றுக்கு ஆர்டர் செய்து வாங்கியவர்கள் டஜன் கணக்காய் ஆர்டர் செய்கிறார்கள் என்றால், இதன் உண்மை நீங்களும் ஒன்று வாங்கினாலன்றி அறிய முடியாது. ஸ்டாக்கு குறைந்துவருவதால் முந்திக் கொள்ளுங்கள் !

முத்தையாவ்ஸ் பாபுலர் ஷர்ட்டுகள்

திக்கான உசத்தி டுயில், பால்போன்ற வெள்ளை, கைதேர்ந்த தையற்காரர்களைக் கொண்டு செய்த மனோகரமான கட்டிங், உறுதியான தையல், உறுதிக்கும் நீண்ட உழைப்புக்கும் உத்திரவாதம் காலருடனும், காலரில்லாமலும் கிடைக்கும். கழுத்தளவுடன் ஆர்டர் செய்யுங்கள்.

நெ. 1	டுயில் ஷர்ட் 1-க்கு விலை	ரூ. 2—0—0.
,, 2	காக்கி ஷர்ட் விலை	ரூ. 2—4—0.
,, 3	இங்கிலீஷ் டுயில் ஷர்ட்	ரூ. 2—4—0.
,, 4	அமெரிக்கன் டோரியா	ரூ. 2—4—0.
,, 5	உசத்தி பாப்ளின் ஷர்ட்	ரூ. 3—8—0.

கே. எவ். முத்தையா கம்பெனி,

தபால்பெட்டி 99, **சென்னை.**

ஓம்

லக்ஷ்மி

தமிழர்களின் முன்னேற்றத்தைக் கருதி
பிரசுரிக்கப்படும்

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

பத்திராதிபர் : K. S. முத்தையா

மலர் 5.	விபவஹு சித்திரைமீ **1928** ஏப்ரல்மீ	இதழ் 9.

28 MAY 1928
MADRAS

அட்டவணை.

பக்கம்.

1. லக்ஷ்மி துதி 387
2. தமிழ் 388
3. ஸ்ரீ திருவிளையாடற் புராணம் 389
4. நட்டாஜி அல்லது சிவாஜியின் சேனைத்தலைவன் ... 392
5. வைகறைத் துயிலெழு 399
6. தாய்மொழி பேணல் 402
7. ராவணன் கோட்டை ஆபிரிக்காவிலா 404
8. மதுசாரம் 408
9. தலைமுடி உதிர்வதேன் 412
10. துரதிர்ஷ்ட இந்தியா 415
11. இயந்திர விபத்து 420

ஆவணக் காப்பக
சென் - 600 0
210328

சந்தா நேயர்களுக்கு

முக்கிய கவனிப்பு.

நமது "லக்ஷ்மி" ஒவ்வொரு இங்கிலீஷ் மாதம் 30-ந் தேதியிலும் வெளியாகும்.

எப்பொழுது சந்தா நேயர்களாகச் சேர்ந்தாலும், அந்தந்த மலரின் முதல் சஞ்சிகையி லிருந்தே அனுப்பப்படும்.

பத்திரிகை நேயர்களுக்குக் கிடைக்க வேண்டிய குறிப்பிட்ட தேதியில் கிடைக்காவிட்டால் உள் நாட்டு நேயர்கள் 10-ந் தேதிக்குள்ளும், வெளி நாட்டார் 15-ந் தேதிக்குள்ளும், சந்தா நம்பருடன் ஆபீஸுக்குத் தெரிவிக்க வேண்டும்.

சந்தா நேயர்களாயிருப்பவர்கள், எவ்விஷயத்தைப்பற்றி ஆபீஸுக்கு லெட்டர் எழுதினாலும், சந்தா நம்பருடன் எழுத வேண்டும். சந்தா நம்பர் லக்ஷ்மியின் விலாசக் கவரில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

நேயர்கள் இடம் விட்டு இடம் மாறினால், மாறுதல் விலாசத்தை 25-ந் தேதிக்குள் சந்தா நம்பருடன் தெரிவிக்க வேண்டும்.

லக்ஷ்மிபால் அன்பு கொண்டுள்ள நேயர்கள் தங்கள் பந்து மித்திரர்களையும் லக்ஷ்மிக்கு சந்தா நேயர்களாகச்சேர்த்துவிடக் கேட்டுக்கொள்கிறோம்.

மானேஜர்,

லக்ஷ்மி ஆபீஸ்,

தபால்பெட்டி 99. சென்னை.

லக்ஷ்மி துதி

பவனன் றன்மைந்தன் முதலாஞ்சில் வீரரும்
பங்கயக்கண்

ணவனுஞ் சிவனு மொம்பாந தேவர் தாமும்
மறைந்த சொற்க

ளிவ ணென்று மெய்ப்படக் காண்கிலேன்
மலரேய்ந்திருக்கும்

தவளங் குலா நகைச் செந்திரு நோக்கந்
தராமையினே

தமிழ்

(தேசியகவி சுப்பிரமணிய பாரதியார் பாடியது)

1. யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்குங் காணோம்
பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ சொல்லீர்
தேமதுரத் தமிழோசை யுலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்.

2. யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மைவெறும் புகழ்ச்சி யில்லை
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம் ஒரு சொற் கேளீர்
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்.

3. பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல்வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல்வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமையில்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதைவணக்கஞ் செய்தல் வேண்டும்.

4. உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்குங் குருடரெலாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்.

ஸ்ரீ
திருவிளையாடற் புராணம்

சங்கப் பலகை தந்த படலம்.

சிவபெருமான் வணக்கம்.

திருவாசகம்.

“ வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான் எனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே ”

[மாணிக்கவாசகர்]

இப்பரதப் பூமகளுக்குத் திலகம்போல் விளங்கும் செழுஞ் செந்தமிழ் சிறந்தோங்கும் மாமதுரையில், வங்கியசேகரபாண்டியன் நீதிமுறை தவறாது செங்கோல் செலுத்தி வந்தான். அந்நாளில், பூர்வம் கங்கா நதியால் சூழப் பெற்ற காசி க்ஷேத்திரத்தில் கமலாசனனாகிய பிரம்மதேவன் பத்து அசுவமேதயாகங்கள் செய்து பூர்த்தி செய்தான். பின்னர் நான்முகன் தீர்த்தஸ்நானம் செய்யக் கருதி, சரஸ்வதி, சாவித்திரி காயத்திரி யென்னும் மனைக் கிழத்தியரோடு கங்கா நதியை நோக்கிச் சென்றான். அச்சமயம் கலைமடந்தை யானவள், வித்யாதர மாதொருத்தி பாடுங் கானத்தில் தன் மனஞ் செலுத்தினள். மலரவன் கங்காதீர மடைந்து கலைமகள் வரவை தாழ்த்தமையால் சாவித்ரியும் காயத்திரியும் தானும் தீர்த்தஸ்நானம் செய்து கரையேறினர். பிறகு நாமகள் வந்து தன் கணவனை நோக்கி நான் இல்லாத போது நீங்கள் எவ்வாறு தீர்த்த ஸ்நானம் செய்வது என்று வெகுண்டு கேட்டனள். அதற்குப் பிரம்மன் தன் நாயகியை நோக்கி, “பெண்ணே! குற்றம் நினதாயிருக்க என் மீது கோபங்கொள்ளல் தகுதியன்று; நீ இழைத்த இத்தீங்கைப் பல மனிதர்களாயுலகில் பிறந் தொழிக்கக் கடவை” என்று சாப மிட்டார். வாணியஞ்சி மனத்துயரெய்தி தன் கேள்வனை நோக்கி, ‘நாயகா! நின்னுயிர்த் துணையாகிய நான் பூவுலகிற் பிறந்து மயங்கவோ!” என்று இரந்து வேண்டினள். பிரமன் மனமிரங்கி, ‘நாயகி! நின் மெய்

யுருவாகிய முதலெழுத்து ஐம்பத் தொன்றில், அகாரமுதல் ஹாகாரமீருயுள்ள நாற்பத்தெட்டக்கரங்களும் நாற்பத் தெண் புலவர்களாகி உலகில் அவதரித்திடுக. அந்தந்தக் கரங்களெல் லாம் ஏறி நின்று அவ்வவற்றின் தன்மை யெய்தி, வெவ்வேறியக் கந் தோன்ற நடத்தும் அகாரத்திற்குத் தலைமையாய் ஒழுகும் நாதர் மாமதுரை எம்பெருமானுகையால் அவர் தாமும் சங்கப் பலகையேறி நாற்பத்தெண்மரில் ஒருவராயிருந்து அறிவு விளக் கிப் புலமை காத்தருள்வர்." என்று கூறினன்.

அவ்வாறே அந்நாற்பத்தெட்டக் காங்களும் புலவர்களா யுதித் துச் சகல சாஸ்திரங்களிலும் கல்வி கேள்விகளினும் ஏனைய பாடைகளிலும் புலமை யடைந்து திராவிடத்தில் தலைமை அடைந்து சிவபக்தர்களாய் அவ்வெம்பிரானைப் பாமாலைகளாலும் பூமாலைகளாலும் அன்புடன் சாத்தி வந்தனர். மற்றும் ஏனைய தேயங்களுக்குச் சென்று தம் புலமையின் திறத்தால் பல புலவர் களை வென்று தம் நாட்டிற்குத் திரும்பிவருகையில் சொக்கலிங்கப் பெருமான் ஒரு புலவர் பெருமானுய் வேடம் பூண்டு, வந்தவர்கள் முன்னின்று "நீவிர் யாவர்?" என்று வினவ, 'யாங்கள் புலவோர்; பாண்டி நாட்டிற்கு வருகின்றோம்" என்று கூறலும், 'ஆயின் நீவிர் நமது சொக்கலிங்கப் பெருமான் திருவடி இறைஞ்சி வருதல் வேண்டும்' என வழைத்துக் கொண்டு போய், மதுரை எம்பிரானைப் பணிவித்துத் திடீரென்று மின்னல் போல் மறைந் தார்.

எம்பெருமான் மறைய, புலவர்கள் ஆச்சரிய மடைந்து எல்லாம் வல்ல இறைவனைப் பலபாடல்களால் தோத்திரம் செய்து பின்னர் பாண்டியனையணுகி பணிந்தார். பாண்டியன் அவர்களது கல்வி கேள்விகளை நன்கு நோக்கி வியந்து தன்னுள் பூத்து, சொக்கலிங்கப் பெருமான் எழுந்தருளி இருக் கும் வடதிசையில் ஓர் மண்டப முண்டாக்கி அவர்கட்கு வேண் டிய சிறப்புகள் செய்தான். பாண்டிய னிடத்திருந்த புலவர்கள் இப்புலவர்களை வாதுக் கழைத்துத் தோற்று, முன்னுள்ள புல மையும் இழந்து வெட்கித் தலைகுனிந்தனர். இவ்வாறே பல தேயத்துப் புலவர்கள் இவர்களை வாதுக்கழைத்துத் தோற்றத னல் இவர்களுடைய கீர்த்தி மேன்மேலும் வளர்பிறை சந்திரன் போல் சிறந்தோங்கிற்று. சங்கப் புலவர்கள்) வாதத்தினு லிளைப் புற்ற மனத்தினராய்ச் சொக்கலிங்கப் பெருமான் சந்நிதியை யடைந்து வணங்கி, 'எம்மிறைவனே! பல தேயத்துப் புலவர்கள்

வந்து நம்மோடு வாது செய்து வருந்துகின்றாராதலின், அவர்கள் புலமையை அளவிட்டறியத் தக்க சங்கப் பலகை யொன்று எங்கட்களிக்கவேண்டும்' என்று குறை யிரந்து நிற்றலும் தயாநிதியாகிய சிவபெருமான் ஒரு புலவர் வேடம் பூண்டு பலகையுடன் தோன்றி, அப்புலவர்களை நோக்கி, 'இப்பலகை சதுரமாய் இரண்டு சாணளவுடையது. மிக்க சுத்த மந்திரவலிமை யுள்ளது. புலமைமிக்கனும்மையொத்தவர்க்கெல்லாம் ஒருமுளம் இருப்பிடம் தரும். இதுவே புலமைக் களவு கோலாயிருக்கும்' என்று கூறி அளித்தருளினார். அவர்கள் அதனை இனிது பெற்றுக் கொண்டு கோவிலை வலம் வந்து சஙகக்கூட்டத்தை யடைந்து அப்பலகைக்குச் சோடசோபசாரஙகள் செய்து துதித்து வணஙகி, நக்கீரன், கபிலர், பரணன் முதலிய அங்நாற்பத் தெண்மரும் ஒன்று கூடி யேற, அவர்கட் கெல்லாம் இடங்கொடுத்தது. அவர்களனைவரும் அதன்கண் ணமர்ந்து பாண்டியத்தியத்தை அபிவிருத்தி செய்து பல சிறந்த நூல்களை அருளிச்செயதனர். அவர்கள் செய்த நூல்கள் சொல்வளம், பொருள் வளம் என்னும் சுவை குன்றாது இருக்கின்றன. அவர்கள் ஒத்துச் செய்தமையால் அச்செய்யுள்கள் பேதிக்காமலிருக்கக் கலக்கங் கொண்டனர். அப்போது அருட்கடலாகிய சொக்கலிங்கப் பெருமான் ஒரு நாவலராய்த் தோன்றி அவர்களின் செய்யுட்களைக் கொண்டு வரும்படி கூறி ஒவ்வொருவருடைய செய்யுளை எடுத்து நல்கி அவர்களுடைய மனதை மயக்கினார். இதைக் கண்ட புலவர்கள் இவரையும் ஒரு புலவராக இருக்கக் கேட்டுக் கொள்ள அவருமிசைந்த பின்னர் அவரைப் பலகையின்மீது ஏற்றி அவரையும் நாற்பத்தெண்மரில் ஒரு புலவராக நாற்பத் தொன்பதாவது புலவராக இவரை ஏற்றுக் கொண்டனர். இவ்வாறிருக்க அவர்கள் பல என்றுமழியாத பசுந்தமிழில் பல கிரந்தஙகள் இயற்றும் நாளில் வஙகிய சேரபாண்டியன் வஙகிய சூடாமணி பாண்டியனுக்கு முடி புனைந்து உலகவாழ்வை வெறுத்துச் சிவபெருமான் திருவடி நிழலடைந்தனர்.

நட்டாஜி

அல்லது

சிவாஜியின் சேனைத் தலைவன்

(ஸ்ரீமான் மயிலை சீனி. வேங்கடசாமி எழுதியது)

12-வது அத்தியாயம்.

காசிபாய் சிறைப்படுதல்.

தாதாஜி தன் மகள் காசிபாயுடன் இராமனைத்துணைகொண்டு நள்ளிரவில் இராஜமாட்சிக் கோட்டையை விட்டுப் போனார் என்று 7-ம் அத்தியாயத்தில் சொன்னோமல்லவா? அவர்கள், சற்றேறக்குறைய 16 மைல் தூரத்திலுள்ள லோககாட் கோட்டைக்குப் போக எண்ணங்கொண்டு, கண்டாலா கிராமத்தின் வழியாகப் போகும் பாதை வழியே சென்றார்கள். அப்பாதை வழியே அவர்கள் போவதாயிருந்தால், அவர்கள் கட்டாயம் ஆபத்தில் சிக்கிக்கொள்வது திண்ணம். ஏனென்றால், அப்பாதை வழியாகத்தான், கண்டாலா கிராமத்திலிருந்து பீஜப்பூர் சிப்பாய்கள் இராஜமாட்சிக் கோட்டைக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். தாதாஜி மேல் பீஜப்பூர் அரசாங்கத்திற்குச் சந்தேகம் ஏற்பட்டிருப்பதால், அவரைச் சிறைபடுத்தி விடுவார்கள் என்பது உறுதி. ஆகவே, பீஜப்பூர் சிப்பாய்களின் பார்வையில் படாவண்ணம் அவர்கள், பாதைக்குச் சற்று தூரத்திலிருந்த இடிந்து பாழ் பட்ட வீடுகளில் போய் ஒளிந்திருந்தனர். அன்றிரவு பீஜப்பூர் சேனைகள் அவ் வழியைக் கடந்து அப்பால் போய்விட்ட பிறகு, அவர்கள் வெளி வந்து தங்கள் யாத்திரையைத் தொடங்கினார்கள். கண்டாலா கிராமத்தில் வந்தபோது பொழுது விடிந்து விட்டது. அன்றிர வெல்லாம் சவாரி செய்தவர்களாதலால் அவர்களுக்குக் களைப்பும் அதிகமாயிருந்தது. இராமன் தன் நண்பனான குடியானவன் வீட்டுக்கு அவர்களை அழைத்துக் கொண்டு போனான். அந்த நல்ல குடியானவன், இராமனையும் அவனுடன் வந்த விருந்தினர்களையும் அன்புடன் வரவேற்று உபசாரங்கள் செய்து அவர்களுக்கு உணவு முதலியவைகளைக் கொடுத்தான். அன்று பகலும் இரவும் அவர்கள் அங்கு தங்கி யிருந்தார்கள்.

அடுத்த நாள் பொழுது விடிவதற்கு முன் அவர்கள் எழுந்து லோககாட் கோட்டைக்குப் புறப்பட்டுச் சென்றார்கள். முன்போலவே காசிபாயும் தாதாஜியும் குதிரைமேல் சவாரி செய்தார்கள். இராமன் கால் நடை

யாக அவர்களுக்கு வழிகாட்டிக் கொண்டு சென்றான். லோககாட் கோட்டைக்குச் செல்லும் பாதை மனித சஞ்சாரமற்று இருபுறமும் காடடர்ந்துள்ள தென்பதை நமது வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள். இந்தப் பாதை வழியே, குளிர்ந்த காலை வேளையில் இயற்கை யழகுகளைப் பார்த்துக் கொண்டே யாத்திரை செய்வது இன்பமாகமே யிருந்தது. இவ்வழியாக நமது யாத்திரிகர்கள் நெடுந் தூரம் போய்விட்டார்கள். கடைசியாக, மலைமேல் கட்டப்பட்டுள்ள கம்பீரமான லோககாட் கோட்டையும் அவர்கள் கண்ணுக்குத் தென்பட்டது. இன்னும் கொஞ்ச நேரத்திற் செல்லாம் கோட்டை போய்ச் சேர்ந்துவிடலாம் என்று நினைத்துச் சற்று வேகமாகப் போனார்கள்.

அப்பொழுது, "யாரங்கே! நில்லுங்கள்!" என்னும் குரல் கடுமையான தொனியுடன் அதிகார தோரணையாகக் கேட்டது. பிரயாணிகள் திடுக்கிட்டுக் குரல் வந்த திசையே திரும்பிப்பார்த்த போது, பாதையின் இடது பக்கத்தில், ஒரு உயரமான பாறையின் மேல், உயரமான ஒரு முரட்டு மனிதன் நிற்பதை யவர்கள் கண்டார்கள். இதற்குள்ளாக ஈசல் போலப் பல மனிதர்கள் புதர்களிலிருந்து ஓடி வந்து அவர்களைச் சூழ்ந்து கொண்டார்கள். அழுக்கு உடையணிந்திருந்த அவர்களில் சிலர் வாளும் சிலர் ஈட்டியும் சிலர் அம்பும் வில்லும், மற்றும் சிலர் குறுந்தடிகளையும் கையில் பிடித்து யமதூதர் போல நின்றனர். அவர்களின் தொகை ஏறக் குறைய நூறுபேரிருக்கலகம்.

ஒரு இமை நேரத்திற்குள் முரட்டு கொள்ளைக் கூட்டத்தார் தங்களைச் சூழ்ந்து கொண்டதைக் கண்டு பிரயாணிகள் மூவரும் திடுக்கிட்டுப் போயினர். பெண்பாலாகிய காசிபாய் மிகவும் பயந்து விட்டாள். மூவரும் என்ன செய்வ தென்று தோன்றாமல் திகைத்தனர். இதற்குள்ளாக பாறைமே லிருந்த மனிதன் இறங்கி அவ்விடம் வந்தான். அவன்தான் கொள்ளைக் கூட்டத்தாரின் தலைவன் என்பது நன்கு விளங்கிற்று. இத்தனை பேருடன் எதிர்த்துப் போராடவோ தப்பி ஓடவோ முடியாது, ஆகையால், தாதாஜி, நல்ல வார்த்தை சொல்லி தப்பித்துக் கொள்ளலாம் என்று நினைத்தார். அவர் கள்வர் தலைவனைப் பார்த்து,

"கடவுளின் பெயரால் உன்னைக் கேட்கிறேன். என் எங்களைப் பிடிக்கிறீர்கள்? உங்களுக்கு நாங்கள் ஒரு தீங்கும் செய்யவில்லை. ஆகையால் எங்களை எங்கள் வழியே போகவிடு" என்ற சொன்னார்.

"கடவுளைப் பற்றி எங்களுக்கு அவசியம் இல்லை. நாங்கள் கடவுளுக்காவது வேறு யாருக்காவது பயந்தவர்களல்ல. நீர் உங்களை விட்டு

விடும்படி சொல்கிறீர். உங்களை விட்டு விடுவதற்கா நாங்கள் பிடித்தோம்?" என்று கேட்டான் கள்ளர் தலைவர்.

தாதாஜி இதைக் கேட்டு அச்சமடைந்தார். கடவுளுக்குப் பயப்படாத இப்பாதகர்கள் தேசிய வீரராகிய சிவாஜிக்காவது பயப்படுவார்கள் என்று நினைத்து அவர் கள்வர் தலைவனைப் பார்த்து,

"நாங்கள் சிவாஜியின் மனிதர்கள். லோககாட் கோட்டைக்குப் போகிறோம். நீங்கள் எங்களைத் தொந்தரவு செய்தால் சிவாஜி உங்களைச் சும்மாவிட மாட்டார்" என்று சொன்னார்.

"சிவாஜியா! அவன் எங்களை என்ன செய்ய முடியும்? அவனும் என்னைப் போல கொள்ளைக்காரப் பயல்தானே? மூட ஜனங்கள் அவனைக் கடவுள் அவதாரம் என்றும் தேசியத் தலைவன் என்றும் வீரன் என்றும் புகழ்ந்து பேசுகிறார்கள். அவன் என்னிடம் வருவானானால் அவன் முதுகெலும்பை என் முழங்காலினால் ஒடித்து விடமாட்டேனா" என்றான் கள்ளன்.

இதற்குள்ளாக, கள்ளர்களில் இருவர் இராமனண்டை வந்து அவன் கைகளைப் பின்புறமாகச்சேர்த்துக் கட்டிவிட்டார்கள். தாதாஜி கிழவர் ஆகையாலும் காசிபாய் பெண்பிள்ளை யாகையாலும் இருவரும் தப்பித்துப் போக முடியாதாகையால் அவர்களை ஒன்றும் செய்யவில்லை.

தாதாஜி தனக்குள் யோசித்தார்: இவர்கள் எதற்கும் அஞ்சாத பாதகர்கள். நம்மிடமுள்ள பொருளையும் நகைகளையும் கொடுத்துவிட்டுப் போவதுதான் மரியாதை" என்று நிச்சயித்தார். கள்ளர் தலைவன் அவர் அருகில் வந்து "நீ யார்? உன் பெயர் என்ன?" என்று கேட்டான்.

தாதாஜி சரியான விடையளித்தார். அதைக்கேட்டவுடன் கள்ளன், "தாதாஜியா! நான் உம்மைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். நீர் கொழுத்த பணக்காரராயிற்றே. நல்லது. அதிக பணம் கிடைக்கும்! ஆனால் எனக்குப் பணம் ஒன்றும் வேண்டாம். உம்மை அதிகமாக ஒன்றும் கேட்கவில்லை. உம் மகளை எனக்குக்கலியாணம் செய்துகொடுத்து விடுவதாயிருந்தால் உம்மை நான் சும்மாவிட்டு விடுகிறேன்" என்றான்.

தாதாஜிக்கு மிகுந்த கோபம் வந்துவிட்டது. அவர் ஆத்திரத்துடன் "என் மகளைத் திருட்டுப் பயலுக்குக் கலியாணம் செய்வதைவிட அவளை என் கையினாலேயே கொன்று விடுவேன்" என்று சொன்னார்.

நட்டாஜி

"இப்படி முட்டாள் தனமாகப் பேசாதே கிழவா! இன்றைக்கு நான் திருடனுயிருந்தால் நாளைக்கு அரசனுய் விடுவேன். இந்தக் காலத்தில் கடுகு மலையாகவும் மலை கடுகாகவும் மாறி விடுவதைப்பார்க்க வில்லையா? சிவாஜி மாத்திரம் என்ன? அவனும் என்னைப் போன்ற சாதாரண மனிதன்தானே? இப்பொழுது அவன் சேனைகளை வைத்துக்கொண்டு இராஜனைப்போல் இருக்கவில்லையா? நானும் அவனைப்போல் இராஜாவாக என்ன தடை யிருக்கிறது?" என்ருன கள்ளர் தலைவன்.

தமது நண்பரும் தேசியத்தலைவருமாகிய சிவாஜியை இந்தத் திருட்டுப்பயல் அலக்ஷியமாகவும் இழிவாகவும் பேசுவதைக்கேட்டு தாதாஜிக்கு வருத்தமுண்டாய் விட்டது. அவர், "என்ன? உன்னை சிவாஜிக்குச் சமம் என்று சொல்லிக்கொள்கிருய்?" என்று ஆத்திரமும் கோபமுமாகக் கேட்டார்.

"ஆம் நான் என்ன, சிவாஜியைவிட குறைந்தவனு? அவனைப்பார்க்கிலும் நான் உயரமாகவும் பல முள்ளவனுகவும் இருக்கிறேன். அது இருக்கட்டும். நான் உன்னை கேட்பதெல்லாம் இது தான், உன் பெண்ணை எனக்கு மனைவியாகக் கொடுத்துவிடு. இதுதான் எனக்கு வேண்டியது. நீ சம்மதித்தாலும் சம்மதிக்காவிட்டாலும் காசிபாய் கட்டாயமாக எனக்கு மனைவியாய் விடுவாள்." என்று சொல்லிக் கொண்டே அந்தக் கள்ளன் காசிபாய் பக்கமாகத் திரும்பி "காசிபாய்! உன் அழகை மகாராட்டிர தேச முழுவதும் புகழ்ந்து பேசுகிறது. உன்னைச் சிறைப்பிடித்தது எனது நல்லதிர்ஷ்டமே. பழைய காலத்தில் வீரர்கள் அழகான பெண்களைச் சிறை பிடித்துக் கொண்டு போய் கலியாணம் செய்து கொள்வது வழக்கமாம். அதைப் போலவே உன்னை நான் சிறைப் பிடித்துக் கலியாணம் செய்து கொள்ளப் போகிறேன். என்னைப் பார்! நான் கடவுளுக் காவது மனிதர்களுக்காவது பயந்தவனல்ல. என் சாமர்த்தியம் ஒருவருக்கும்வராது. இப்படிப்பட்ட வீரனுகிய என்னை நீ சந்தோஷமாகக் கலியாணம் செய்து கொள்வாயல்லவா?" என்று கேட்டான்.

இதைக் கேட்டதும் காசிபாய்க்கு எவ்வளவோ கோபமுண்டாய் விட்டது. கோபத்தினுல், அந்தத் திருட்டுப் பயலைக் கடித்துத் தின்று விடுவாள் போல அவ்வளவு ஆத்திரமடைந்தாள். ஆனுலும் அவள் பெண் பிள்ளை. என்ன செய்ய முடியும்? அவள் புத்திசாலியாகையால், சமயோசிதமாகப் பேசுவதே தகுதியான தென்று யோசித்து தனக்குண்டான

கோபத்தையும் ஆத்திரத்தையும் அடக்கிக்கொண்டு, "நான் சிறுபெண்ணு யிருக்கும்போதே தேசாபிமானமுள்ள ஒருவனையே கலியாணம் செய்து கொள்வதாய் தீர்மானித்துக் கொண்டேன். ஆகையால், இப்பொழுதும் தேச விடுதலைக்காக உழைப்பவரைத்தான் கலியாணம் செய்து கொள் வேன். நீயும் சிவாஜியுடன் சேர்ந்து துலுக்க அரசனை ஓட்டி மகாராட் டிர தேசத்தைச் சுதந்தரமடையச் செய்தால், ஒருவேளை என் தகப்பனுர் உனகருக் கலியாணம் செய்து கொடுக்கச் சம்மதிப்பார்" என்று சொன்னுள்.

காசிபாய் சமயோசிதமாகப் பேசியதன் கருத்தை அந்த முட்டாள் கள்ளன் அறிந்து கொள்ளவில்லை. அதற்கு மாருக, காசிபாய் தன்னைக் கலியாணம் செய்து கொள்ள சம்மதித்து விட்டதாக அவன் நினைத்துக் கொண்டான். தாதாஜி, காசிபாயின் புத்திசாலித் தனத்தையறிந்து அவன் சொன்னதன் கருத்தையறிந்து கொண்டார்.

கள்ளன் காசிபாயைப் பார்த்து "நானு,—வெங்கட்டவாகுவாகிய நானு, சிவாஜியின் கீழ் சேவகம் செய்வேன். சே, சே, அந்த எண்ணத் தைவிட்டு விடு. ஆனுல் உன்னைக் கல்யாணம் செய்து கொண்டு, உன் கட்டளைப்படியே, பாஜாகுகையின் கள்ளர் தலைவனுகிய நான் தேசாபி மானமுள்ள ராஜனுக மாறிவிடுவேன்" என்று பெருமையாகச் சொல்லி விட்டு, தாதாஜி பக்கமாகத் திரும்பி "காசிபாய் சம்மதித்து விட்டாள், ஆகையால் உன்சம்மதத்தையும் இப்பொழுதே சொல். இது முதல் நான் கொள்ளையடிக்குந் தொழிலை விட்டு விட்டு சிவாஜியைப் போல, தேசாபிமான முள்ளவனுய் தேசவிடுதலைக்காகப் பாடு படுவேன்" என்றுன்.

தாதாஜி:—நீ கொள்ளையடிப்பதை விட்டு விட்டு தேசாபிமான முள்ளவானுய் மாறி விட்டதற்காகச் சந்தோஷப் படுகிறேன். ஆனுல், உனக்கு தேசாபிமானம் வந்து விட்டது என்பதையும் கொள்ளையடிப் பதை விட்டு விட்டாயென்பதையும் காட்ட எங்களை எங்கள் வழியே போகவிடு. அப்பொழுதுதான் நீ தேசாபிமான முள்ளவன் என்று எங்க ளுக்குத் தெரியும்".

இதைக் கேட்டவுடனே கள்ளன் கொல் லென்று வாய்விட்டுச் சிரித் தான். அவன் சிரித்தது அமைதியா யிருந்த அக்காடு முழுவதும் ஒலித் தது. அவன் சிரித்துக் கொண்டே "ஆ ஹா! இல்லை, இல்லை. அது முடியாது. உங்களை விட்டு விட்டால் நீங்கள் சிவாஜியிடம் போய்ச் சேர்ந்து கொள்வீர்கள். நீங்கள் என்னுடைய பாஜா குகைக்கு விருந்தாக

வந்திருந்து எனக்குக் கலியாணத்தை முடித்து வைத்துவிட்டு பிறகு போங்கள். வாருங்கள் போவோம்'' என்ருன்.

உடனே கள்ளர்கள் எல்லோரும் தங்கள் சிறையாளிகளோடு, பாதையைவிட்டு காட்டில் குறுக்கு வழியாக நடந்தார்கள். இரண்டுபேர் காசிபாயின் குதிரையையும் தாதாஜியின் குதிரையையும் பிடித்துக் கொண்டு வழி நடந்தார்கள். இராமனை இன்னெருகள்ளன் பிடித்துக் கொண்டு நடந்தான்.

இவர்கள் இவ்விதம் காட்டின் வழியே நடந்தபோது இராமன் தன்னைப் பிடித்திருக்கும் கள்ளனுடைய முகத்தைப் பார்த்தான். உடனே அவனுக்கு ஆச்சரியமும் நம்பிக்கையும் உண்டாய் விட்டது. ஏனென்ருல் இராமனைப் பிடித்திருந்தவன் அவனுக்கு அறிமுகமான கோபாலன் என்பவனே. இராமனும் கோபாலனும் சிறுவயதில் நண்பர்களாயிருந்தவர்கள். கோபாலனும் இராமனைத் தெரிந்து கொண்டான். ஆனுல், தன் கூட்டாளிகளான கள்ளர்கள் பார்த்து விடுவார்கள்'' என்று பயந்து வெளிகாட்டிக் கொள்ளவில்லை. இராமன் சமயமறிந்து கோபாலன் காதில் இரகசியமாகச் சொன்னுன். "என்னைத் தப்பித்துப்போக விட்டால் தாதாஜி உனக்கு அதிகப் பணம் இனும் கொடுப்பான். எனக்கு இந்தச் சமயத்தில் இந்த உதவியைச் செய்'' என்ருன்.

கோபாலன், "உன்னை எப்படித் தப்பித்து வைப்பது. உன்னை விட்டு விட்டால் என்னை மரத்தில் கட்டி தூக்குப் போட்டுக் கொன்று விடுவார்கள்'' என்று மெதுவாகச் சொன்னுன்.

"நீ எனக்கு ஒன்றும் செய்யவேண்டாம். அதோ அந்த அடர்த்தியான காடண்டைபோகும் போது நீ பிடித்திருக்கும் பிடியைச் சற்று தளர்த்திவிடு. அதற்கு மேல் நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்ருன் இராமன்.

கோபாலன் யோசித்தான். இராமன் தனது பழைய நாளையசிநேகிதன். அவனுக்கு இச்சமயத்தில் இச்சிறு உதவியைச் செய்யாமலிருப்பது மரியாதையல்லவென்று கள்ளனுயிருந்தாலும் அவன் புத்திக்குப் பட்டது. அன்றியும் இராமன் பரம ஏழை. அவனிடத்தில் பணமாவது நகையாவது ஒன்றும் கிடையாது. அவன் தப்பிப் போய்விடுவதனுல் ஒருவருக்கும் நஷ்டமில்லை என்று சிந்தித்தான். கடைசியாய் இராமனை விடுவிக்கச் சம்மதித்தான்.

எல்லோரும் காட்டின் வழியே நடந்தார்கள். இராமன் குறிப் பிட்ட இடத்தண்டை வந்ததும் கோபாலன் தான் பிடித்திருந்த பிடியைச் சற்று தளர்த்தி விட்டான். உடனே, இராமன் திடீரென்று அடர்த்தி யான புதருக்குள் பாய்ந்து மறைந்தான். அவன் ஓடும்போது கட்டப்பட்டி ருந்த தன் கைகளைச் சாமர்த்தியமாக விடுவித்துக் கொண்டான். அவன் தப்பி ஓடியதைக் கண்ட திருடர்களிற் சிலர் அவனைப் பின்தொடர்ந்து ஓடினார்கள். புதரும் செடியும் அக்காட்டில் அடர்த்தியாக விருந்தபடி யால் அவன் போன இடம் தெரியவில்லை. அவர்கள் சற்று நேரம் அவ னைத் தேடியலைந்து விட்டுக் கடைசியாக வெறும் கையாய், வாயால் சொல்லக்கூடாத வார்த்தைகளால் அவனை வைதுகொண்டே வந்து சேர்ந்தனர். கோபாலன் நினைத்தபடியே, அவன் முக்கியமான கைதி யல்லவாகையால் கள்ளர்தலைவனும் அவனைப் பற்றி கவலைப்படவில்லை.

தப்பி ஓடிய இராமனே, சாமர்த்தியமாகக் கள்ளர்கண்ணுக்குத் தென்படாமல் மறைந்து ஓடி அடர்த்தியான ஒரு புதருக்குள் நுழைந்து விட்டான். அங்கு அவன் நெடுநேரம் சந்தடியின்றி ஒளிந்திருந்தான். தன்னைத் தேடிவந்த திருடர்கள் போய்விட்ட பிறகு கூட பயத்தினால் அவன் அவ்விடத்திலேயே மறைந்திருந்தான். கடைசியாக முன் அத்தி யாயத்தில் சொல்லியபடி, நட்டாஜி முகம்மதிய சிப்பாய் வேஷத்துடன் லோககாட் சாலை வழியே சவாரி செய்து வருவதைக் கண்டு, அவனிடம் ஓடி அவனை உதவிக்கழைத்து காசிபாய் சிறைப்பட்ட செய்தியைத் தெரி வித்தான்.

தொடரும்.

ஆப்கன் அமீர் தமது மனைவியுடன் போலந்திற்கு விஜயஞ் செய்த போது அவருக்கு போலந்தில் செய்த ஆகாய விமான மொன்றை நன் கொடையாக அளித்திருக்கின்றனர்.

அமெரிக்க ரேடியம் கம்பெனி யொன்றில் வேலைசெய்துவந்த 5 பெண்கள் அக்கம்பெனியாரின் அஜாக்கிரதையாலேயே இறந்து விட்ட தால் அக்கம்பெனியார் மீது நஷ்ட ஈடு வழக்குத் தொடுத்திருக்கின்றனர்.

ராயல் கமிஷன் சென்றபோது லாகூரில் காங்கிரஸ் தலைவர்கள் கல கஞ்செய்த்தாக போலீசார் சில தலைவர்களைக் கைது செய்ததை நண்பர்க ளறிவார்கள். ஆனால் இப்பொழுது சப்தம் போடாமல் வழக்கை வாபீஸ் வாங்கிக்கொண்டு விட்டனர்.

திருவனந்தபுரத்திற்கு அருகிலுள்ள மைதானத்தில் திடீரென்று இடி விழுந்ததில் 5 பேர் மாண்டனர்.

வைகறைத் துயிலெழு

ஆசிரியர் மு. மாணிக்க நாயகர் புதுவை.

நிலைமண்டில வாசிரியப்பா.

ஆக்க லளித்த லழித்தன் மூன்றி
லாக்கற் கண்டாற் கமர்ந்தோ ளன்னை
வாணி ! யவடன் வடிவ மென்னக்
காணு முதியள் ! கல்விதோ "யவ்வை,"
ஆத்தி சூடிப் பெயரா னமைந்த
நாற்றிசை போற்று நன்னூ லொன்றை
யாத்தனள் முன்னே யாவருங் கற்றுக்
கோட்டமில் மனத்திற் குலவி வாழ!
மன்னு "வைகறைத் துயிலெழு" வாக்கிய
மின்னு மதனுள் மிகுபொரு டோன்ற!
ஒளிநிலை வடிவா யொளிருங் கடவுள்
அளிகழ லிரண்டு மடைதற் கென்றே
பலவினை நீக்கித் தவவினை கொள்ளுந்
தவத்தினர் ஞான்று வைகறை யதனிற்
குளித்துச் சான்றோர் கூற்றை நம்பி
யொளி திகழ் மதக்குறி தெளிவுறத் தீட்டி
யாசை தனைவெறுத் தைம்புல னொடுக்கிப்
பூசை நிகழ்த்திப் புனித ராவா.
வில்லும் வாளும் விடுக்குங் கல்வி
வெல்லுங் கரிபரி யேறும் வித்தை
மற்போர் சிலம்பப்பயிற்சி மற்றும்
நல்யாழ் தெறிக்கு நலனுறு பழக்கமுங்
குருக்கண் முன்னிலை விளக்கக்கொண்டு
முறைவழி தவறு நெறியின் முழுது
நிறைவர் வைகறை நேரமதனில் !
தேனைப் பிலிற்றுந் தீம்மொழி ஞெப்பண்
ஆனைச் சாத்தன் அருங்குரற்றீங்குயில்
காவல் புரிவோர் கணக்கிற் கூவுஞ்
சேவல் அரிட்டம் செகத்தை விரட்டும்
பரிகசப் புள்ளோ டின்னன பலவுந்
துரிசொன் றின்றித் துயினீத் தெழுந்து
விடியற் காலம் ஞாலம் விளக்கப்

லக்ஷமி

படிமீ தொற்றைத் தேரோன் படர்வன்
எழுமின் ! உலகீர் ! இயனுறு மிறையைத்
தொழுமின் இன்பந் தோற்றுமன்னியும்
உழுமின் பண்ணை யோங்கும் செந்நெல்
வழுக்கும் வற்கடம் மறையு மெய்யென்
றறைகூ வும்போ லனைத்து மென்றாய்
நிறைந்து பாடும் நிறைவை கறையில் !
பகைவலி தன்னாற் பகைவர் வலிமை
நடைபெறா தழித்துத் தன்கீழ் நடக்கு
முலகைக் காத்துமே லோங்கி யண்ணல்
நிலவுந் தன்மை நிகர்த்த மியானென.
உழவர் தோண்மே னாஞ்சி லுருளப்
பழகுறு கால் நடை பக்கம் படர்தர
நீர்வளம் பெற்ற நெல்விளை கழனி
சீர்பெற வுழுது விதைத்து முறையாய்ச்
செந்நெல் மற்றுஞ் செம்மைசேர்பயிர்கள்
எந்நாடோறு மேற்றமாய்க்கண்டும்
உலகத்துயிர்களை யுண்ணின் றுடற்று
முலகப்பகையா ரூட்பசி யதனை
வீட்டி ஞால முழுதும் விளங்க
நாட்டும் பெற்றி நாங்களுடையேம் !
என்றிறு மாந்தே யெழிலார் வைகறை
தன்னிற் றகைபெறச் சார்வர் மாதோ!
ஒன் றைவிட்டுமற் றொன் றிற் பாயுங்
கன்றலிற் கடுவன்கீட நிகர்க்கு
மனமோவென்னின் மாற்றான் குணம்போல்
இனமுறு மைவ ரியற்றுணை கொண்டு
வையம், வனிதை வழங்கும் பொன்வேற்
பையப்பாயும் பழுதற் றொழிய
அம்மாண்புடைய வலைச்சன் மனமும்
எம்மாண்பின்றி யியங்குநேரம்
புலவர்போற்றும். புனித வைகறை
யலவோ நண்பீர் ! அறைதன்மிகவோ !
பன்னூற் றேர்ச்சிப் பயன்பெற வுன்னும்
பன்னூற் பயிலும் பயிற்சிப் பெற்றியர்
பாடங் கேட்கப் பண்புறு நேரம்
பாடங் கற்கப் பயன்றருகாலை
பாட மீயப் மடரும் போழ்து
பாடம் நினைக்கப் பழக்கும் வைகறை!
சீர்பெறு நற்குடி கண்டநர் சிறார்தாம்
ஏர்திகழ் தாயொடு தந்தையை யியல்பெறத்

வைகறைத் துயிலெழு

தொழுதெழுந்திடுநெறி தோற்றிடு நேரம்
வழுவிலா வைகறை வளப்பமன்றோ !
விழுமிழை நல்லார் விளங்கொளி முதல்வனை
தொழாஅராகிக் கேள்வரைத் தொழூஉம்
சிறப்பினைத் தோற்றிச் செகத்திற் கீயும்
அறம்பயில் காலை யமையும் வைகறை !
ஞான்று தோறு நல்லர் தீயர்
கான்றிடத்திரிந்து கடிவினை நிகழ்த்தி
யிரவிற்றுயில்கொண் டினிதிற்றூங்கி
யுரம்பெற வெழுந்து நல் லூக்கங்கொண்டு
வினைபல புரிய விழையுங் காலம்
பனிமலர் நிறையும் பயனுறு வைகறை !
பழந்தமிழ் நாட்டுப் பழக்கப் படியே
விழையு மார்கழி மதிநிறை வைகறை
தம்புகழ் தோற்றுந் தாசர், தொண்டர்
தம்முடற் சுத்தஞ் செய்து தார்கொள்
கைம்பலர் கொண்டு கனமுடி சாத்தி
யெம்பெருமானை யெழுப்பவெழுச்சி
பாடி யுருகிப் பத்தி மிகுந்தும்
ஆடியிருந்து மன்பிற்றோய்ந்து
ஆதி முதல்வ னருளைப் பெற்றுச்
சோதியின்பந் துய்க்கு நாளே !
பலவகை திறத்துப் படரு முல்கீர்
மலர்திகழ் பஞ்சம் நெடிதுயி னீத்தே
யெழுவோம் ! இறைவனை யேத்தியடிபெற
விழைவோம் அன்பாய் ! விழைவோம் அருளையே

திருவாங்கூரில் ஒரு நாடார் இளைஞன் தனது மனைவியின் காதிலிருந்த நகைகளை அபகரிக்க முயன்றும் முடியவில்லை. உடனே கோபமூண்டு நகையைத் திருப்பி காதில் போடும் பாவனையாக கத்திகொண்டு கழுத்தை யறுத்துக்கொலை செய்ததோடு தடுக்க முயன்ற மைத்துனனையும் படுகாயப்படுத்தி விட்டான்.

சென்னை சூளையில் 30 வயதுள்ள ரத்தினவேலு அம்மாள் சமையல் செய்துகொண்டிருக்கையில் பக்கத்திலிருந்த மண்ணெண்ணெய் புடவையில் ஊற்றி தீப்பிடித்துக்கொண்டது. பக்கத்தி லிருந்தோர் நெருப்பணைத்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயும் பயனில்லாது மாண்டார்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் 600 008
210378

தாய் மொழி பேணல்

தமிழ் மொழி வளர்ச்சிக்காம்

சீர் திருத்தங்கள் :

[சுகவனம் சிவப்பிரகாசனுர்.]

தமிழ் வளங்குன்றியுள்ள தற்காலத்திலே அஃது பண்டை நிலையுறவும், தமிழகத்தார் தாம் இதுபோழ்து மாறியுள்ள சீர் கலைந்துள்ள நிலையினை ஒருவாறு சீர்ப்படுத்தவும் ஆன ஏற்ற வழிகளை இத்தலைப்பு ஆராயப் புகுகின்றது.

முன்னதாக்கூறிய நம்மொழி வளந்தரு நிலையிற் பொலிவுற்றிலகுமாயின் தமிழ் மக்களின் சேவல நிலையும் தானே சீர்ப்பெறும். ஆதலான், நமது மொழி வளர்ச்சிக்கு இன்றியமையாதனவாய சில அகத்தியமான முயற்சிகளை ஈண்டு குறிப்பிடுகின்றேம்.

(1) பண்டைக்கால இலக்கியங்களை இக்காலத்து எளியநிலைக் கல்வியாளரும் இனிதின் உணர்ந்து கொள்ளுமாறு மிகச் சுலப நடையில் அந்நூற்களின் நயமும், கருத்தும், தெளிவும், மேம்பாடும் விளங்க எளிதான நடைப்போக்கில் சிறு சிறு புத்தகங்களாகத் தக்கவர்களைக் கொண்டு வெளியிடல் ; கல்வியாளர்கள் இந்நிலையில் முயன்று பாடுபட்டுழைத்தல்.

(2) மேற்கண்ட இலக்கிய இலக்கண நூல்களின் அருமை பெருமைகளைக் கற்றறிந்த புலமையாளர்கள் அமயம் நேர்ந்துழியெல்லாமும், சாமானிய சனங்களும் விரும்பும் நடையில் பல சன சமூகத்திலும் கூட்டங்களினும் நயம்பட, ஊக்கம் உண்டாகும்படி, கல்லாரும் விரும்பிக்கற்க ஆவலுறும்படி, எளிமையாகக் கூறுதல். இதனையே "அரிய கற்று எளிய கூறல்" என்பர் பெரியோர்.

(3) பிறநாட்டு மொழிகளில் உள்ள அரிய காவியங்களை, சாஸ்திரங்களை, சரித்திர உண்மைகளை, நம் தமிழ்மொழியில் இனிய எளிய வசன நடையில் மொழி பெயர்த்து உலகிற் பரவச் செய்தல்.

(4) அரிய நூல்களை வெளிப்படுத்திக் காசாசை கொண்டு அந்நூற்களுக்குப் பெரும் விலையேற்றி அல்றற்படுதல் தமிழ் நலம் பேணும் அறிஞர் கடனாகாது. எனவே தமிழில் உண்மை யபிமானமுள்ள தக்கவர்கள் பணவருவாய்யை முன்னிடாமல் அரும் நூல்களைச் சுலப விலைக்கே உலகிற் பரவுமாறு விற்பார்களாயின், பிறர் எதிர்பார்த்து விற்கும் பணவருவாயினும் மிகப்பெருக அடைதலோடு தங்களின் உண்மையான தமிழ் உழைப்பினால் தமிழுலகுக்கு ஒப்பற்ற பெரும்பணியைச் செய்ததுமாகும். இத்துறையில் கல்வியாளர்கள் கவனம் பெரிதும் செலுத்துதல் அவசியம்.

(5) தமிழ்க்கல்வி, மொழி, இவற்றிற்குத்துரைத்தனத்தார் தாமே உணர்ந்து மகிழ்ந்து ஆதரவு அளிக்க முற்படுமாறு, தமிழபிமானத் தொண்டர்கள் ஒன்றுபட்டு விடாமுயசியுடன் உழைத்து வருதல்.

(6) தமிழகப்புராதன சரித்திரங்களை ஊக்கத்துடன் தேடி ஆராய்ச்சி செய்தல் ஆதியனவும் பிறவுமாம்.

உலகத்திலுள்ள நகரங்களில் விஸ்தீரணத்திலும், மற்றவைகளிலும் இன்று முதன்மைபெற்று விளங்குவது லண்டன் நகரே யாகும். எனவே அந்நகரம் 1846-லிருந்ததிற்கும், 1927-ல் இருக்கும் நிலைமைக்கும் என்ன வித்தியாச மிருக்கிற தென்பதை கவனிப்போம்.

1846-ல் லண்டனில் 21,13,535 ஜனங்கள் வசித்து வந்தனர். அவ் வருஷத்தில் 22,272 விவாகங்கள் நடந்தன. 69,882 குழந்தைகள் பிறந்தன. 20,432 பேர் மாண்டனர். 1927-ல் 45,50,000 ஜனங்கள் லண்டனில் வசிக்கிறார்கள். 73,263 குழந்தைகள் பிறந்தன. 41,301 விவாகங்கள் நடந்திருக்கின்றன. 1846-ல் மரணத்தைவிட ஜனனத்தின் தொகை 20,432, அதிகமாயிருந்தது. ஆனால் 1927-லோ ஜனனம் 19,178 அதிகமாயிருக்கிறது. 1846-ல் ஆயிரத்திற்கு 21-பேர் வீதம் 19,178, விவாகஞ் செய்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் 1927-லோ ஆயிரத்திற்கு 18-பேரே விவாகஞ் செய்துகொண்டிருக்கிறார்கள். ஜனனம் மரணப் யாவற்றிலும் குறைவுதான் ஏற்பட்டிருக்கிறது. ஜனத்தொகை மாத்திரம் இரட்டிப்பாக அதிகரித்திருக்கிறதே யன்றி விவாகம், ஜனன, மரணம் முதலியன யாவும் இப்பொழுது குறைந்துதானிருக்கின்றன.

ராவணன் கோட்டை ஆபிரிக்காவிலா?

ராமாயணக் கதையை அறியாத இந்தியர் இரார். ராமரின் பத்னி சீதையை ராவணன் காதலால் சிறைவைத்து விட்டதால், ராமர், இலங்கைக்குச் சென்று இலங்கேச்வரனுகிய ராவணனைக் கொன்று சீதையை மீட்டாரென்பது கதையின் வரலாறு. இக்கதை உண்மையா, இல்லையா வென்பதைப் பற்றி நமக்குக் கவலையில்லை; அதைக் குறித்து ஆராயப்போவது மில்லை. ஆனல் ராவணன் ஆண்ட இலங்கை கன்னியாகுமரிக்குத் தெற்கில் தற்கால மிருக்கும் இலங்கைத் தீவா, அன்றி வேறு எங்காவதிருந்ததா வென்பதே நாம் இங்கு முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயமாகும். சமீபத்தில் ஆப்பிரிக்காவில் பூமிக்குள் புதைந்து கிடந்த நகரைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ராமாயணத்தில் வால்மீகி போன்றவர்கள் இலங்கையை எவ்விதம் வர்ணித்திருக்கின்றனரோ அதேவித அங்க அடையாளங்களோடு புதையுண்டு கிடந்த நகரம் தென்படுவதால் ராவணனின் இலங்காபுரி இதுதானே என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. எனவே இவ்விஷயத்தைக் குறித்து சிறிது ஆராய்வோம்.

பூமிக்குள் புதைந்து கிடந்த நகரம் ஆப்பிரிக்காவின் மத்தியில் கடற்கரைக்கு வெகு தூரத்தி லிருக்கிறது. அவ்விடம் மலைகளும் காடுகளும் அடர்ந்த இடமாதலால் வெள்ளையர் அங்கு சென்றிருக்க நியாயமில்லை. ஆனல் 1868-ல் ஒரு வேட்டைக்காரர் அதைக் கண்டு பிடித்தார். ஒவ்வொரு கட்டிடமும் முட்டைவடிவமாக இருக்கிறது. சுவர்கள் உளி கொண்டு செதுக்கிய கற்களால் சுண்ணும்பு முதலிய சாந்துகளெதுவுமின்றி கட்டி யிருக்கின்றனர். சுவர்களில் எத்தகைய எழுத்துக்களையும் காணேம். நீண்டகாலத்திற்கு முன்பு கட்டியதாகவும் தோன்றவில்லை.

கட்டியது யார்?

இப்பொழுது கண்டு பிடிக்கப்பட்டுள்ள கட்டிடங்களிலிருந்து இருவித அபிப்பிராயங்களுண்டாகின்றன. அந்நகரம் 600 வருஷங்களுக்கு முன்பு சிறந்து விளங்கி யிருக்கவேண்டுமெனச்சிலர் கூறுகின்றனர். மேலும் ரொடீஷியக் கட்டிடங்களை இவற்றிற்குவமையாகக் கூறி

அச் சுதேசிகளே அக்கட்டிடங்களைக் கட்டியிருக்க வேண்டு மென்றும் கூறுகின்றனர். இவர்கள் கூறுவதிலிருந்து மத்திய காலத்தில் ஐரோப் பாவில் எத்தகைய நாகரிக மிருந்ததோ அத்தகைய நாகரிகம் ஆப்பிரிக்கா சுதேசிகளிடமும் 600 வருடங்களுக்கு முன்பு இருந்திருக்க வேண்டு மெனத் தெரிகிறது.

மற்றும் பலர் வேறுவித அபிப்பிராயங் கொள்ளுகின்றனர். ஜிம் பேஸ்வி என்னு மிடத்தில் புதை பட்டுக் கிடந்த இக்கட்டிடங்கள் வெகு காலத்திற்கு முன்பு, அதாவது வெள்ளையர் இங்கிலாந்திலும் பிரான்சிலும் காட்டு மிராண்டிகளாய்த் திரிந்த பொழுதே கட்டப்பட்டிருந்த தென்பது அவர்களுடைய அபிப்பிராயம். தென் அரேபியாவிலும் மொசபடோமியா விலும் பர்சியக் குடாக் கடலின் ஓரமாகவுள்ள இடங்களிலும் சேதமடைந் திருக்கும் கட்டிடங்களில் எத்தகைய சிலாசாசனங்களோ அன்றி கல் வெட் டுகளோ கிடைக்காம விருப்பதையும் தங்களுடைய கூற்றிற்கு அவர்கள் காரணமாகக் கூறுகின்றனர். ருடீஷிய சுதேசிகள் அக்கட்டிடங்களைக் கட்டியிருப்பார்களென்று எண்ணவும் நியாயமில்லை யென்று கூறுகின்ற னர். ருடீஷியர் இன்னும் அநாகரிகர்களாகவே இருக்கின்றனர். எனவே அக்கட்டிடங்களைக் கட்டியவர்கள் வெளி தேசங்களி லிருந்து குடியேறிய அன்னியர்களாகவே இருக்கவேண்டும். ரொடீஷியாவும், டிரான்ஸ்வாலும் இன்றும் உலகத்தின் மற்ற பாகங்களை விட அதிக செல்வ முடையதா யிருக்கிற தென்றே கூறவேண்டும். ஏனெனில் அங்கு விலை யுயர்ந்த உலோகங்களையும் மற்றவைகளையும் தரத்தக்க சுரங்கங்கள் பல இருக்கின்றன. ஆகையால் அங்கு அக்காலத்தில் நாகரிகம் படைத் திருந்த எச்சாதியினராவது குடியேறி அச்செல்வங்களை யெல்லாம் சூறை யாடிக் கொண்டு போயிருக்கலாம். அச்சாதியார் யார் எனச் சிலர் உடனே ஒரு கேள்வியைப் போடலாம். உண்மையே. உலகத்தில் ஒரு காலத் தில் நாகரிகத்தோடு சிறந்து விளங்கியவர்கள் மற்றொரு காலத்தில் பூண்டற்று மறைந்து விடுவதில்லையா? நாகரிகததில் சிறந்து விளங்கிய ரோமர் எங்கே? கிரேக்கர்தான் எங்கே? அவர்களெல்லோரும் காளாவட் டத்தில் கொஞ்சங் கொஞ்சமாய் மறைந்து அழிந்து விடவில்லையா? ஆகை யால் ரொடீஷியாவில் குடியேறி யிருந்தவர்களும் அழிந்து மறைந்திருக் கலாம்.

ரொடீஷியாவிலும் டிரான்ஸ்வாலிலும் பல பழைமையான விஷயங் களை இப்பொழுது கண்டெடுத் திருக்கின்றனர். அவைகளை ஆழ்ந்து

ரோக்கும் பொழுது ஒரு காலத்தில் அப்பிரதேசங்களி லிருக்கும் சுரங்கங் களிலிருந்து ஏராளமான விலையுயர்ந்த உலோகங்களை எடுத்திருக்கின்றன ரென்பது நன்கு விளங்குகிறது. கல்வெட்டு முதலியவைகளை ஆராய்ச்சி செய்யும் நிபுணர்களும் அப்பிரதேசத்தில் ஒருகாலத்திலிருந்தவர்கள் சுரங்கங்களைப் பற்றி அதிகமாகத் தெரிந்துகொண்டிருந்ததோடு நூற்றுக் கணக்கான டன்கள் பொற்கட்டிகளை எடுத்திருக்கக் கூடுமென்றும் ஒப்புக் கொள்ளுகின்றனர். இவர்கள் கூறும் ஆதாரங்களிலிருந்து அங்கு குடியே றியிருந்தவர்கள் 7,50,00, பொன் பெருமானமுள்ள தங்கக்கட்டிகளை எடுத்திருக்கின்றன ரென்றும் யூகிக்கின்றனர்.

ராமாயணம் கூறும் விவரம்.

மேலே கூறியவைகளெல்லாம் உண்மையாகவே நடந்திருக்கலாம். ஆனால் சுரங்கங்களைக் கண்டுபிடித்து தங்கக்கட்டிகளை எடுத்தது யார்? ரொடீஷியா சுதேசிகளாகிய பான்டஸ் ஜாதியார் ஆதியில் அவ்விதஞ் செய்திருப்பார்களாகில் அவர்கள் இப்பொழுது இருப்பதைவிட மாறு பட்ட நிலையை அடைந்திருக்க வேண்டும். அன்னியர் குடியேறிச் செய் திருக்கலா மென்றால் அந்த அன்னியர் யார்? அன்னியரை அறிந்து கொள்வதா யிருந்தால் நாம் பண்டைச் சரித்திரங்களைத்தான் ஆராய வேண்டும். போனீஷியர் என்ற ஜாதியினர் அடிக்கடி கடல் யாத்திரை செய்து வந்ததோடு மிகுந்த செல்வம் படைத்தவர்களென்றும் கூறுகின்ற னர். சாலமன் என்ற அரசருக்கு தங்கச் சுரங்கங்களைத் தெரியு மென்று கூறுகின்றனர். வால்மீகி இலங்கையை வர்ணிக்கையில் சுவர்ண நகர மென்றும் தங்க மயமாகப் பிரகாசித்ததாகவும் கூறுகிறார். தெற்கே தங்கச் சுரங்கங்களுள்ள தேசம் ஆப்பிரிக்காதான். மேற் கூறியவைக ளெல்லாம் அங்கிருந்ததாகத்தான் கருதுவதா?

இனி நமது ராமாயணம் குறிப்பிடும் இலங்கையைப் பற்றி கவனிப் போம். வால்மீகி முதலிய கவிகள் இலங்கை இந்திய துறைமுகத்தி லிருந்து ஆயிரக்கணக்கான காதங்களிருந்ததாகக் கூறுகிறார். இப்பொ ழுது நாம் காணும் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் அதிக தூரமில்லை யென்பது யாவருக்குந் தெரிந்ததே. ராவணன் சிறந்த சிவபக்தன் என்றும் சிவபூஜை செய்யாதிரா னென்றும், கைலாசத்தை தனது நகரில் கொண்டுபோய் வைத்துவிட வேண்டு மென்பதற்காக பெயர்த்தா னென் றும் சிவன் அழுத்த நசுக்குண்டு பின் வேதகீதம் பாடி மீண்டானென்

ராவணன் கோட்டை ஆப்பிரிக்காவிலா ?

றும் ராமாயணக்கதை கூறுகிறது. இது உண்மையோ இல்லையோ அதைப்பற்றி இப்பொழுது நாம் வீணில் ஆராய்ந்து கொண்டிருக்க வேண்டியதில்லை. நமக்கு இங்கு வேண்டியது ராவணன் சிவ பக்தனென்பதே. ராவணன் சிவனை லிங்கா ரூபமாக பூஜித்து வந்திருக்கிறான். அவன் ராக்ஷச வம்சத்தைச் சேர்ந்தவன். எனினும் ராமாயணத்தில் கூறியிருக்கிறபடி கவனித்தால் இலங்காபுரி செல்வ வளம் மிகுந்திருந்ததோடு ரசாயன அபிவிருத்தியிலும் மற்றவைகளிலும் முன்னேற்ற மடைந்திருந்ததென்றே தெரிகிறது.

இப்பொழுது ஆப்பிரிக்காவில் கண்டெடுத்திருக்கும் கட்டிடங்களில் சூரியன் முதலிய உருவங்களையும் செதுக்கி யிருக்கக் காணோம். ஆனால் கோயிலொன்று காணப்படுகிறது. அதற்குள் பிரம்மாண்டமான லிங்கமொன்றிருக்கிறது. இவைகளிலிருந்து நாம் தெரிந்து கொள்ளக் கூடியதென்ன ? இவைகளிருந்து ராவணன் ஆண்டவிடம் அதுவாகவே இருக்கக் கூடுமென புலப்பட வில்லையா ?

பாழடைந்த கட்டிடங்களைப் பார்த்தால் ராணுவம், நிர்வாகம் முதலியவை அதிக ஒழுங்காக நிர்வகிக்கப் பட்டு வந்திருக்கின்றன வென்பது நன்றாகத் தெரிகிறது. ராவணனுடைய ராஜ்யமும் இவ்விதம் மேன்மையுற்றிருந்ததாகவே நாம் ராமாயணக் கதையில் காண்கிறோம். இவைகளையெல்லாம் ஆதாரமாகக் கொண்டே ராவணன் ஆப்பிரிக்காவில் தான் ஆண்டிருக்கலா மென்று ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகின்றனர்.

" தமிழ் நாடு "

இலங்கையில் ஒரு செம்படவன் வீட்டில் 700 ரூபா இருப்பது தெரிந்த கள்வர்கள் அவன் வீட்டில் கன்னம் வைத்தார்கள். அப்படி கன்னம் . வைக்கையில் உறங்கிக்கொண்டிருந்த செம்படவன்மீது ஒரு நண்டு ஏறவே அவன் விழித்தெழுந்து விளக்கேற்றி அதனைத் தடி கொண்டு அடித்துக் கொன்றானாம். இச்சந்தடிகளைக் கேட்ட கள்வர்கள் ஓட்டம் பிடித்தார்களாம். கள்வரைக் காட்டிக் கொடுத்த நண்டைக் கொன்றது பற்றிச் செம்படவன் வருத்த முற்றானாம்.

மதுசாரம்

(காபிரைட்)

(ஸ்ரீமான் ஏ. சொக்கலிங்கம்பிள்ளை எழுதியது)

மதுசாரம், எதிர்க்குஞ் சக்தியுள்ள சூக்குமரந்திரங்களை அல்லது கண்ணறைகளைக் கெடுக்கிறது.

Alcohol injures the fight cells.

இரத்தத்திலுள்ள சிவப்பணுக்கள் வெள்ளையணுக்களிவற்றின் வித்தியாசம்

இரத்தத்தில் இரண்டுவித அணுக்களிருக்கின்றன. அவை, சிவப்பணுக்கள் வெள்ளை அணுக்கள் என்பனவாம். அவை, ஒன்றுக் கொன்று வித்தியாசப்படுகின்றன. வெள்ளையணுக்களின் தொகையைப் பார்க்கினும் சிவப்பணுக்கள் ஏராளமாயிருக்கின்றன.

சிவப்பணுக்களெல்லாம் ஒரே வடிவமும் ஒரே அளவு முள்ளன. வெள்ளை யணுக்கள் வடிவத்திலும் அளவிலும் வேறு படுகின்றன. சிவப்பணுக்கள் இரத்தத்திலிருந்து இரத்த வோட்டத்தோடு செல்லுகின்றன. வெள்ளை யணுக்கள், முதல் அத்தியாயத்தில் சொல்லிய அமீபாக்களைப் (amoebas) போலவே பெரிதும் ஒத்திருக்கின்றன. அவை, அமீபாக்களைப் போலவே தங்கள் வடிவங்களை மாற்றிக் கொள்ளவும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்லவுந் திராணியுடையன. இவ்விதமாக, அவை இரத்த நாடியை விட்டு, உறுப்புக்களின் மூலமாகச் செல்லக் கூடும். ஆதலால், வெள்ளை யணுக்களைத் தேகத்திலுள்ள அமீபாக்களென்று சொல்லலாம். வெள்ளை யணுக்களைச் சிவப்பணுக்களோடு ஒத்திட்டுப் பார்க்கும் போது, அவை சொற்பமேயானாலும், அவை அதி முக்கியமான தொழிலைச் செய்ய வேண்டி யிருக்கிறது. அதனைப் பின் வருவனவற்றால் தெரிந்து கொள்ளலாம்.

வியாதிக்கிருமிகள் தேகத்துள் எப்படிப் புதுகின்றன.

பல வருஷங்களாக இரத்தத்திலுள்ள வெள்ளை யணுக்களைப் பற்றி டாக்டர்களுக்குத் தெரியாதிருந்தது. அவர்களுக்குச் சிவப்பணுக்கள் உயிர்வாயுவைக் கொண்டு போகின்றன வென்பது தெரியும். ஆனால்,

வெள்ளையணுக்களின் உபயோகந்தான் என்ன வென்பதை அவர்கள் அறிந்து கொள்ளக் கூடவில்லை. சுவாசம் அல்லது வாய் அல்லது தேகத்திலுண்டாகுங் காயங்களிவற்றின் வழியாக இரத்தத்தில் புகுகின்ற அதிநுட்பமான கிருமிகளே (germs) க்ஷயம் (consumption) சுவாசப்பை அழற்சி (pneumonia) வாந்தி பேதி (cholera) அதிசார சுரம் (enteric fever); இரத்தம் விஷத்தன்மையடைதல் (blood poison) இவை போன்ற இன்னும் பலவியாதிகளுக்குக் காரணமாகின்றன வென்று பின்னர் கண்டு பிடிக்கப்பட்டது. உடம்பினுள் புகுந்த கிருமிகள், அவ்வுடம்பைத் தங்களுக்கு ஆகாரமாக உபயோகித்துக் கொண்டு அங்கே வளர்ந்து, ஆச்சரியப் படத்தக்கவிதமாக ஒரு கிருமியே அதிவிரைவில் இலட்சக் கணக்காகப் பெருகுகின்றது. அவ்வாறு பெருகுகிற கிருமிகள் இரத்தத்தில் விஷத்தை (toxin)க் கழிக்கின்றன. அதனால் வியாதியும், சிலசமயம் மரணமுண்டாகின்றது.

வியாதிக்கிருமிகள் எவ்வாறு பெருகுகின்றன.

மேற்சொன்ன கிருமிகளில் ஒன்று முழுதும் வளர்ந்துவிடுமாயின் அதன் நடுவிலிருந்து இரண்டாகப் பிரிகின்றது. ஆகவே, ஒருகிருமி இரண்டாகின்றது. இவ்விரண்டு கிருமிகளும் முழுதும் வளர்ந்தால் இவற்றுள் ஒவ்வொன்றும் நடுவிலிருந்து பிரிந்து நான்கு கிருமிகளாகின்றன. இந்நான்கில் ஒவ்வொன்றும் சீக்கிரமாகவே இரண்டிரண்டு கிருமிகளாகப் பிரிகின்றன. இப்படியே பல கிருமிகள் ஒரு மணி நேரத்தில் முழுதும் வளர்ந்து பிரிந்து கொண்டே போகின்றன. இக்கிருமிகள் ஒரு மணி நேரத்திற் கொருதரம் பிரிகிற தென்றால், ஒரு கிருமியிலிருந்து 24 மணி நேரத்தில் எத்தனை கிருமிகள் உண்டாகலா மென்பதை இதனை வாசிக்கும் நீங்களே கணக்கிட்டுப் பார்த்துக் கொள்ளலாம்.

டாக்டர் மெட்சினிகாப் (Dr. Metchini coff) வெள்ளை யணுக்களைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்.

"நான் ஒரு நாள் ஒரு தவளையைச் சோதிப்பதற்கு அதனைச் சிற்றுருவிளக்கி யென்னும் (Microscope) பூதக்கண்ணாடியின் மூலமாய்ப் பார்த்தபோது, அதன் தோலடி (The web of the frog's foot) அழகாயும் மிகத்தெளிவாயு மிருந்தது. அத்தோலடியில் இரத்த அணுக்களின் ஓட்டத்தைப் பார்த்தேன். அதன் இரத்தத்தில் வாந்தி பேதிக் கிருமிகளைச் செலுத்தினேன். செலுத்தியதும், தவளையின் தேகத்தின் எல்லாப் பாகங்களிலிருந்தும் வெள்ளை யணுக்கள் கூட்டமாய் வந்ததைக் கண்

டேன். அவை, தமக்கு உரிமையில்லாமல் உள்ளே புகுந்த வாந்திபேதிக் கிருமிகளைத் தாக்கி விழுங்கிவிட்டன. இப்படிச் செய்ததில் இன்னொரு விசேஷமிருந்தது. அதென்னெனின், ஒரு வியாதிக்கிருமி (Disease Germ) வலுவுள்ளதாயிருந்து, ஒரு வெள்ளையணுவால் அதனை யெதிர்க்க முடியாமற் போன போது, அதற்கு வேறொரு வெள்ளையணுவந்து உதவி செய்தது; ஆனால், வியாதிக் கிருமிகள் சிறிதா யிருந்த போது, வெள்ளை யணுக்கள் அவற்றைத் திமிங்கிலமானது (Whale) சிறு மீன்களை விழுங்குவது போல விழுங்கி விட்டன.''

மேற்சொன்ன வெள்ளையணுவுக்கு மூளையில்லையாயினும், அமீபாக்களை (Amoebas) ப்போலவே ஏதோ சில அபூர்வ இயற்கையறிவினால் தாங்களென்ன செய்ய வேண்டு மென்பதைத் தெரிந்திருந்தன. கையில்லையாயினும் அவை பகைவரைப் பற்றிக் கொண்டன, வயிறில்லையாயினும் அவை பகைவரை விழுங்கி விட்டன, வயிறில்லையாயினும் தாம் விழுங்கின பகைவரைச் சீரணித்துக் கொண்டன. இவ்விதச் செயலால் தவளை யிறப்பதினின்றும் அவை அதன் உயிரைக் காப்பாற்றின. இவ்வெள்ளை யணுக்களுக்கு டாக்டர் மெட்சினிகாப் பாகோஸைட் (Phagocytes) என்று பெயரிட்டனர். பாகோஸைட் என்றால் விழுங்கும் கண்ணறைகளென்பது பொருள்.

மதுசாரம், வெள்ளையணுக்களுக்குத் தீங்கு செய்கின்றது (alcohol hurts the phagocytes)

டாக்டர் மெட்சினிகாப் Dr. (Metchinicoff) கூறுவதாவது:—

“நான் இன்னொரு சமயத்தில் தவளையின் இரத்தத்தில் சிறிது அதிக விஷமுள்ள கிருமிகளையும், அதனோடு சிறிதளவு மதுசாரத்தையுஞ் செலுத்தினேன். அம்மதுசாரம் இரத்தத்திற் சேர்ந்தால் வெள்ளை யணுக்கள் ஒன்றாகக் கூடுவதற்கும், அவை, எங்கே சீக்கிரமாக வரவேண்டியதோ அந்த அபாயகரமான இடத்தைச் சேருவதற்கும் நெடுநேரமாயிற்று. ஏனெனின், அச்சிறிதளவு மதுசாரமே வெள்ளை யணுக்களைச் சுறுசுறுப்பில்லாமல் செய்துவிட்டது. அன்றியும், அவ்வணுக்கள் அக்கிருமிகளி ளிருக்குமிடத்தை அணுகியும் அவற்றை விழுங்க மனமில்லாமல் திரும்பி விட்டன.

இவ்விதமாக, மதுசாரத்தால் வெள்ளை யணுக்கள் துர்ப்பலப்படுவதால் வியாதிக்கிருமிகள் உடம்பினுள் பெருகிக் கொடிய வியாதிக்கேனும் அல்லது மரணத்திற்கேனுங் கொண்டுபோக நேரிடுகின்றது.

கிருமிகளைக்கொல்லும் சக்தி—Germ killing power.

சுவாசம், வாய் உடம்பிலுண்டாகுங் காயங்களிவற்றின் வழியாய்த் தேகத்தில் எப்போதும் புகுகின்ற வியாதிக்கிருமிகளைச் கொல்லும் ஒரு சக்தி, தேகாரோக்கிய முடையவர்களின் இரத்தத்தில் சாஸ்திர நிபுணர்களால் கண்டு பிடிக்கப்பட்டது. அதற்குக்கிருமி கொல்லுஞ் சக்தி germicida power-germ killing) என்று சொல்லப்படும். கிருமி கொல்லுஞ்சக்தி எதனாலுங்கெடாம லிருக்குமாயின், அவை, இரத்தத்திலுள்ள வியாதிக்கிருமிகளை அழித்து விடும். அதனாலே தேகம் ஆரோக்கிய முள்ளதாயிருக்கும். ஆனால், வியாதிக்கிருமிகள் இரத்தத்தில் அதிகமாகச் சேருமாயின் கிருமி கொல்லுஞ் சக்தி அவற்றை யழிப்பதற்குக் கூடாமற் போகலாம். அப்போது தேகத்தைப் பாதுகாப்பதற்கு ஏதேனும் உபாயத்தை உபயோகிக்க வேண்டியிருக்கிறது. கிருமிகள் இரத்தத்தில் விஷங்களை (toxins) யுண்டாக்கத்தொடங்கும்போது, தேகத்தின் கண்ணறைகள் (body cells) அவ்விஷங்களை யழிக்கப் பிரதி விஷங்களையும் மற்றப்பொருள்களையு முண்டாக்கி, அவ்விஷங்களின் வேகத்தை யழிப்பது மல்லாமல் விஷவாயுவைப் போலிருந்து, விஷத்தையுண்டாக்கும் பகைவர்களை மயக்கமடையச்செய்கின்றன. உடனே வெள்ளையணுக்கள் (Phogocytes) அவற்றைப்பற்றி விழுங்கிவிடுகின்றன.

மேற்சொன்னவைகள் விஷக்கிருமிகளை யெதிர்த்துக் கொன்று, தேகத்தைக் காப்பாற்றத் தகுதியற்றவைகளானால் அல்லது சூக்குமரந்திரங்கள் விஷக்கிருமிகளைக் கொல்லப் பிரதி விஷங்களை யுண்டாக்கச் சக்தியற்றவைகளானால் அல்லது வெள்ளை யணுக்கள் விஷக்கிருமிகளைப் பற்றி விழுங்குதற்குத்திராணியற்றவைகளானால் என்ன சம்பவிக்கின்றது? அப்போது இரத்தத்தில் வியாதிக்கிருமிகள் பெருகுகின்றன. பெருகின கிருமிகளை யெதிர்ப்பவைகள் பின் வாங்குகின்றன. பிறகு இரத்தவோட்ட வழிகள் (blood vossels) கைப்பற்றப்பட்டு, கிருமிகளாகிய சேனைகள் பெருகி முன்னேறிச் சென்று, இருதயமாகிய தலை நகர் பிடிக்கப்படுகிறது. கடைசியில் தேகம் வியாதிக்கிருமிகளின் வசமாகி, மனிதன் மரணமாகின்றான்.

ஆகவே, நம்முடைய உயிரும் தேகாரோக்கியமும், இரத்தத்தில் நிலைத்துள்ள சேனையைச் செம்மையாகவும், வியாதிக்கிருமிகளாகிய பகைவரை யெதிர்த்துச் சண்டையிடக் கூடிய நிலைமையிலும் வைத்திருப்பதைப் பெரும்பான்மையும் பொறுத்திருக்கின்றது. ஆனால், நம்முடைய இரத்தத்தில் வேலை செய்வதற்குத் தகுதியாயுள்ள சேனையைத்தகாதவிதமாக்க அநேக பிரதிகூலங்கள் துணையாயிருக்கின்றன. அத்துணைகளாவன. சளிபிடித்தல், கெட்டக்காற்றைச் சுவாசித்தல், குறைவான உணவு, போதுமான தூக்கமின்மை, அதிக வேலையால் சோர்வடைதல், பல மருந்துகளை உட்கொள்ளல், மதுபானம் முதலியனவாம்.

தொடரும்

தலைமுடி உதிர்வதேன்?

உங்களுடைய தலையிலுள்ள கேசத்தைக் காப்பாற்றிக் கொள்ளுவது உங்களுடைய கடமையாக விருக்கிறது. அவைகளை அலக்ஷியஞ் செய்து விடாதீர்கள். உங்களுடைய கவனிப்பில்லாமலே அவைகள் சரியா யிருந்துவரும் என்று நினைத்து விடாதீர்கள். அவைகள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ளுவதற்கு சக்தியுடையவைகளன்று. நீங்கள் அருமையாக வளர்க்கும் எருதும் நன்றாக வளருவதில் நீங்கள் மிகுந்த சிரத்தை யுடையவர்களாக இருக்கின்றீர்கள். தேகத்தின் விஷயமும் இதுவே. அது சரியாக வளரும்படி கவனித்துக்கொள்ள வேண்டும்; தினந்தோறும் அதன் விஷயத்தில் சிறிது சிரத்தை எடுத்துக் கொள்ளவேண்டும். அது ஒருவித அபாயமுமில்லாமலிருப்பதால், உங்களுடைய மண்டைத்தோலுக்குப் பெரிய பாதுகாப்பாக அது இருக்கும்.

தங்களுடைய தலைமயிரைக் கோதி சீர்ப்படுத்திக்கொள்ளுவதற்கு தினமானம் ஸ்திரீகள் 5 முதல் 7 நிமிஷமும், புருஷர்கள் 3 நிமிஷமும் செலவிடவேண்டும். இவ்விதம் செலவிட்டு வந்தால் உங்களுடைய தலைமயிரானது அழகாயும் மினுமினுப்பாகவும் இருக்கும். உங்களுடைய தலைமயிர் நன்று யிருப்பதில் நீங்கள் பெருமை யடையுங்கள். அதற்குத்தகுந்த பிரதி பிரயோஜனம் கிடைக்கும். மனிதர்கள் வாரமொரு முறை கேசத்தை நன்றாகத் தேய்த்து குளிப்பாட்டுகிறார்கள். ஸ்திரீகளும் வாரமொரு முறை இவ்விதம் செய்கிறார்கள்.

எவ்விதம் நீங்கள் பிளேக்கை வெறுப்பீர்களோ அவ்விதம் கேசவளர்ச்சித் தைலம் முதலியவைகளைக்கண்டு வெறுப்படையுங்கள். நான் சொல்லியப்படி கேசத்தைச் சரியாக கவனித்துக்கொண்டு வந்தால், அது படிந்திருப்பதற்கு மேல் பிரயோகங்கள் அவசியமாக இரா. தலை மயிர்மீது உருளையைவிட்டு உருட்டியதுபோல் அது படிந்திருக்கும்படி செய்வதற்காக பிசின்களைத் தடவிக் கொள்ளும் புருஷர்கள், இந்த விஷயத்தை முக்கியமாக ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். தினந்தோறும் பிசினைத் தடவி வருவதால், கடைசியில் தலை மயிர் நாற்றமெடுத்து விடுகிறது இந்த முறையை அனுஷ்டித்து வருவதால் உச்சந்தலைத் தோலில்

தொல்லை ஏற்படுகிறது. கேசத்தையும், உச்சந்தலைத் தோலையும் சுத்த மாக வைத்துக்கொள்ள வேண்டும். அழுக்கும், தூம்பும் சேர இடங் கொடுக்கக் கூடாது. அரிப்பாவது, எரிச்சலாவது ஏற்படவும் இடங் கொடுக்கக் கூடாது.

உதிர்தல்.

ஏதாவது ஒரு காரணத்தால் கேசம் உதிர்ந்து புதிய கேசம் முளைக்க வேண்டி யிருக்கிறது. மனிதர்களுடைய கேசம் இவ்விதம் அடிக்கடி உதிர்வது சகஜமாக இருக்கிறது. மிருகங்களுடைய கேசமானது சில பருவ காலங்களில் உதிர்கிறது. கேசத்தின் அடிப்பிடிப்பு விட்டுப்போ கையில் அது தளர்ச்சி யடைந்து தலையைச் சீவுகையில் உதிர்ந்துவிடுகி றது. அவ்வளவு வேகமாக மறுபடியும் அது முளைத்துக் கொண்டிருந் தால் கவலைப்படத் தேவையில்லை. ஆனால் கேசம் வேகமாக உதிர்ந்து அதே வேகத்தில் புதிய கேசம் முளைக்காமலிருப்பின் கவலைப்பட இட மேற்படுகிறது.

தடுக்கும் வழி.

சரீரத்தைப்பிடித்துவிட்டுக் கொள்ளுவதானது ரத்த ஓட்டம் பெரு கும்படி செய்வதற்குச் சிறந்த உபாயமென்பதை எல்லோரும் ஒப்புக் கொள்ளுகின்றனர். பல நூற்றாண்டுகளாக இந்த முறை கையாளப்பட்டு வருகிறது. வலி உபத்திரவம் ஏற்படுகையிலாவது, களைப்பினால் சரீரம் சோர்ந்திருக்கையிலாவது சரீரத்தைப் பிடித்து விட்டுக்கொள்ளும் வழக் கம் ஆதிகாலந்தொட்டு இருந்துவந்திருக்கிறதென்று சரித்திரங்களிலிருந்து தெரிகிறது. அதனால் சரீரமாதியந்தம் ரத்த ஓட்டம் ஏற்படுகிறதென் பதை எல்லா வைத்தியர்களும், மற்றவர்களும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். பிடித்துவிட்டுக்கொள்வதால் உச்சந்தலைத்தோல் பக்கத்திலும் ரத்த ஓட் டம் அதிகரிக்கும்படி ஏன் செய்துகொள்ளக்கூடாது.

தேகத்தின் மேற்பக்கத்தில் தாராளமாக ரத்தம் வந்து சேரும்படி செய்துகொள்ளுவதற்கு கேசம் முழுவதையும் சிறிது இழுத்துவிட்டுக் கொள்வதே சரியான உபாயமாகும், இவ்விதம் செய்வதால் உச்சந்தலைத் தோலாட்டம் ஏற்படுகிறது. வேறெந்த வழியிலும் இதைச் செய்வது சாத்தியமில்லை.

இந்த சிகிச்சை முறையை ஆரம்பித்துவிடின். தேகத்தின் வேர்கள் நுட்பமான நிலைமையை அடைந்துவிடும். இருந்தாலும் பிடிவாதமாகவும் மிருதுவாகவும் இந்த முறையை அநுஷ்டித்துவந்து காலக்கிரமத்தில் கடுமையாக இழுக்கவேண்டும்.

இந்த முறையினால் செத்துப்போன கேசம் உதிர்ந்து விடுகிறது. செத்துப் போன கேசமானது உச்சந்தலைத் தோலில் ஒட்டிக்கொண்டிருக்கும்படி விட்டுவைக்கக் கூடாது. அவைகள் பிடுங்கி எறிந்துவிடக் கூடிய நிலைமையை அடைந்ததும் அவைகளை அகற்றிவிடவேண்டும். செத்துப்போன கேசங்கள் சதாவாகவே உதிர்ந்து போகும் வரை உச்சந்தலைத் தோலில் தங்கியிருந்து வரும்படி விட்டு வைத்திருந்தால், வேர்களை அவைகள் கொன்று மறுபடியும் அந்த இடத்தில் கேசம் முளைக்காமற் போய்விடும். தலையிலிருந்து கேசம் அதிகமாக உதிர்ந்துவர ஆரம்பித்துவிடின் செத்துப் போன கேசமாவது தங்கியிருக்கட்டுமென்று ஸ்திரீ, புருஷர்கள் நினைக்கிறார்கள். அநேகமாக இந்தக் கேசங்களின் வேர் அழுகி, அந்த இடத்தில் மறுபடியும் கேசம் முளைக்காமற் போய்விடுகிறது. கைவிரல்களைப் பிரித்து வைத்துக்கொண்டு, கேசத்திற்குள் விரல்களைப் பத்திக் கொள்ளுங்கள். விரல்களின் இடுக்குகளில் கேசங்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு கையை உயர்த்துங்கள். இவ்விதம் செய்கையில் உச்சந்தலைத்தோல் உயரும். இவ்விதம் உச்சந்தலைத் தோல் முழுவதும் உயரும்படி செய்யுங்கள்.

இந்த முறையை அனுஷ்டிப்பதால் கேசத்தின் வேர்கள் கெட்டிப்படுவதோடு, செத்துப்போன கேசங்களும் உதிர்ந்துவிடுகின்றன. கேசத்தை நன்றாக சுத்தம் செய்த பிறகு கடைசியில் இவ்விதம் செய்தால் கேசத்திற்கு அழகு ஏற்படும். இவ்விதம் கேசத்திற்குச் சிகிச்சை செய்துவரின் அது உறுதிப்பட்டு, யாரேனும் கேசத்தைப்பிடித்து இழுத்தாலும் வலி ஏற்படாது. கேசத்திற்கும் உச்சந்தலைத் தோலுக்கும் இதைவிட சிறந்த சிகிச்சை முறையில்லை என்றே சொல்லலாம்.

(பாததுலமித்திரன்)

துரதிர்ஷ்ட இந்தியா

லாலா லஜபதிராய் எழுதியது.

லாலா லஜபதிராய் "துரதிர்ஷ்ட இந்தியா" என்னும் பெயருடன் மேயோ எழுதிய "இந்திய மாதா" என்னும் புத்தகத்திற்கு பதிலாக ஒரு புத்தகம் எழுதி வெளியிட்டிருக்கிறார். அப்புத்தகத்தை தமிழில் மொழி பெயர்த்து வெளியிட ஏற்பாடு செய்திருக்கிறோம். அப்புத்தகத்தில் லாலா லஜபதிராய் எழுதிய நூன்முகத்தை ஒவ்வொருவரும் படிக்கவேண்டியது அவசிய மாகையால் அதைக்கீழே வெளியிடுகிறோம். (பத்திராதிபர்.)

அத்தியாயம் 1

நூன் முகம்

கன்னி மேயே எழுதிய "இந்தியமாதா" என்னும் நூலின் முதலிரண்டு பகுதிகளும் (அத்தியாயம் 1 முதல் 10 வரை) ஹிந்துக்களின் சமுதாய வாழ்க்கையை—அதாவது சமுதாய ஊழல்களைக் குறிப்பனவாக இருக்கின்றன. அவர் எடுத்துக் கூறும் ஊழல்களெல்லாம் இந்திய ரனைவரிடத்தும் பொதுவாகக் காணப்படினும், ஹிந்துக்களை மட்டுமே அவர் குறைகூறுகிறார். இந்த அத்தியாயங்கள் பத்தும் இந்திய மாதர்களையும் புருஷர்களையும் தூற்றுவனவாகவே இருக்கின்றன. சமுதாயச் சீர்திருத்தத்தில் மிகுந்த அக்கரையுடைய இந்தியனும் கூட கன்னி மேயோவின் புனைந்துரைகளையும் பொய் மூட்டைகளையும் ஒப்புக் கொள்ள மாட்டான்.

ஏனென்றால், பிள்ளையாருக்குக் குட்டும் போதே கண்ணில் குட்டிக் கொண்ட மாதிரி, சில தப்பெண்ணங்களுடனும் ஆதாரங்களுடனும் கன்னிமேயோ நூல்எழுதத் தொடங்கி விட்டார். சர்க்கார் உதவி பெறுது பாரபட்சமற்ற மனத்துடன் நூலெழுதியதாகக் கூறும் கன்னி மேயோ அரசியல் பிரசாரத்துக்கென்றே இந்தியாவுக்கு வந்த விஷயத்தை நாம் முன்னுரையிலேயே விளக்கியிருக்கிறோம். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் குற்றங் குறைகளை மறைப்பதே அவரது முழு நோக்கமாக இருந்திருக்கிறது. ஆகவே ஒரு நூலாசிரியருக் குரிய தருமங்களை அவர் அறவே கைகழுவ விட்டுவிட்டார். இந்தியாவில் அறியாமையும், நோய்களும், வறுமையும், குடிகொண்டிருப்பபதற்கு பிரிட்டிஷ் சர்க்காரே ஜவாப்தாரி யென்று அவா ஒப்புக்கொள்கின்றாரில்லை. அவரது பார்வையில் இந்தி

யர் முழுதும் தீமையே குடி கொண்டிருக்கிறது. ஹிந்துக்களெல்லாம் சிற்றின்பப் பைத்தியங் கொண்ட மிருகங்களா யிருப்பதே அதற்குக் காரணமாம்.

இந்திய சமுதாய வாழ்க்கையைப் பற்றி அவர் கூறி யிருக்கும் வரலாறுகள் பின்வரும் அத்தியாயங்களில் விரித்துரைக்கப்படும். ஆனால் இந்நிலைமைக்கு இந்திய சர்க்கார் ஜவாப்தாரியல்ல வென்று அவர் கூறும் வாதம் சரியா தப்பா என்று முதன் முதலில் ஆராய வேண்டியது இன்றியமையாததாயிருக்கிறது. 'இந்திய மாதா' 23-வது பக்கத்தில் சர். சிமன்லால் சேதல்வாடும், மகாத்மா காந்தியும் கூறிய சில மொழிகள் மேற்கோளாகக் கையாளப் பட்டிருக்கின்றன. "சுயமாக ஒன்றைச்செய்யும் ஆற்றலும் மனத்துணிவும் விடாமுயற்சியும் இந்தியர்களிடம் இல்லாமையே, இந்தியாவின் கஷ்டங்களுக்கெல்லாம் காரணம் என்று சர். சிமன்லால் கூறியிருக்கிறாராம். அதற்கடுத்தாப்போல் மகாத்மாவின் "யங் இந்தியா" பத்திரிகையி லிருந்து ஒரு வாக்கியமும் எடுத்தாளப்பட்டிருக்கிறது. அது பின் வருமாறு "நாம் சுயமாக ஒன்றைச் செய்யச் சக்தியற்றவர்களா யிருப்பதற்கு அரசாங்கத்தாரைக் குறை கூறுவது நியாயமே ஆகும்."

பின்னர் இதர இந்தியத் தலைவர்கள் கூறிய சில மொழிகள் உதகரிக்கப்பட் டிருக்கின்றன. அவையாவன: "நமக்குள் ஊக்கம் குன்றியிருக்கக் காரணமென்ன? சகோதர உணர்ச்சி நம்முள் என் பரவவில்லை? நாம் இளவயதிலேயே ஆண்மையற்று, அகால மரணமடையக் காரணமென்ன?

நமது புராதனப் பெருமை எங்கேனும் மறைந்து விட்டதா? நமது ஆத்மீக சக்தி அழிந்துவிட்டதா? நம்முடைய நாட்டில் அன்னியர் வந்து கால் வைத்த நாள் முதல் நமக்குப் பல வித துன்பங்கள் எற்படத்தொடங்கினவே. நமது பண்டைப் பெருமை ஒழிந்தது; சிறப்பு அழிந்தது. இனி என் செய்வது! ஒன்றும் செய்வதற்கில்லை. மேடைமீதேறி நின்று, நம்மை அடக்கியாளும் கொடுங்கோல் அதிகாரிகள் வெருண்டோடும் வணா உரக்கக் கத்துவதுதான் நமக்கு மீதமாயுள்ள ஒரே ஒரு வழி. பிரிட்டிஷார் நம் நாட்டை விட்டுப்போன பிறகே, சுயேச்சையாய் நமது தாய் நாட்டின் குறைகளை நீக்க முடியும்."

இதற்கெல்லாம் கன்னி மேயோ கூறும் நொண்டிச் சமாதானம் பின்வருமாறு:— "பிரிட்டிஷ் ராஜாங்கம் நல்லதோ கெட்டதோ எப்படி

யானாலும் இருக்கட்டும்; அதற்கும் மேலே கூறியவற்றிற்கும் யாதொரு சம்பந்தமுமில்லை.

சோம்பல், முயற்சியின்மை, ஊக்கமின்மை சுயமாக ஒன்றைச் செய்யும் சக்தியின்மை தேக வலியின்மை ஆதியனவெல்லாம் இந்தியர்களிடம் இப்பொழுதுதான் தோன்றியிருக்கின்றன வென்று எவரும் எண்ணி ஏமாந்து போகவேண்டாம். அக்குறைபாடுகளனைத்தும் தொன்று தொட்டு இந்தியர்களிடம் அமைந்தவைகளே. இவைகளுக்கெல்லாம் தாங்களே காரணமென்றுணர்ந்து, அவைகளை நீக்க முயற்சிக்காமல் வெறும் வாய்வீச்சு வீசிக்கொண்டிருந்தால் இன்னும் பல்லாண்டு இந்தியர்கள் இதே நிலைமையில் தான் இருக்கவேண்டியதாக வரும். ஒருநாளும் அவர்கள் முன்னேற்ற மடையப் போவதில்லை. இந்தியர்களின் உடலும் உயிரும் அடிமைப்பட்டிருப்பது உண்மையே. ஆனால் அடிமை விலங்கை அவர்களே தாமாக மாட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவ்வடிமை விலங்கை தகர்த்தெறிய எவ்வளவோ முயற்சித்தும் பயன்படவில்லை. அதைத் தகர்த்தெறிவதற்கு இந்தியர்களுக்குள் ஒரு புதிதான சக்தி உதயமாகவேண்டும். மூற்காலப் பெருமையையும், தற்காலப் பெருமையையும், பிற்காலத்தில் அடையப் போகும் சிறப்புகளையும் நினைந்து வீண்கனவு கண்டு கொண்டிருந்தால் இந்தியர்கள் ஒரு நாளும் விடுதலை யடைய மாட்டார்கள்.''

"உதாரணமாக 12 வயதுள்ள ஒரு இந்தியச் சிறுமியை எடுத்துக் கொள்வோம். அவளுக்கு உடம்பில் எலும்பும் தோலும் தவிர, வேறொன்றுமில்லை. அவள் கல்வி யில்லாதவள்; அறிவைப் பெறாதவள், தேக ஆரோக்கியத்தை எவ்வாறு பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்று எவரும் அச் சிறுமிக்குக் கற்பிக்கவில்லை. இந் நிலைமையில் அவள் ஒரு குழந்தையைப் பெற்று விடுகிறாள். இத்துணை திடகாத்திரமுள்ள ஒரு சிறுமிக்குப் பிறக்கும் குழந்தை, எந்நிலைமையிலிருக்குமென்பது நாம் சொல்லாமலே விளங்கும். அக் குழந்தையைத் தேகப்பயிற்சி செய்விப்பதில்லை. சுத்தமான காற்று வசதியுள்ள இடத்தில் தூங்க வைப்பதில்லை. அக்குழந்தை பாலப்பருவ மடைகின்றான். அப்பொழுதும் அவனது தேக சௌக்கியத்தைக் கவலையுடன் கவனிப்பார் ஒருவருமில்லை. ஆகவே, அவனுக்கு 30 வயது ஆனவுடன் உடல் மெலிந்து, அங்கம் தளர்ந்து ஆண்மை குன்றி வாடிவிடுகின்றான். இதற்குக் காரணம் என்னவென்று நீங்கள் வினவுவீர்கள்?

''கிராமந்திரங்களிலுள்ள ஜனங்களை எடுத்துக்கொள்ளுங்கள். அவர்களுக்குக் கல்வியில்லை ; கல்வியில் விருப்பமுமில்லை. அவர்களுக்கு ஆரம்பக் கல்வியளிக்க முயற்சித்துப் பாருங்கள். ஆனால் பெண்களை மட்டும் ஆசிரியர்களாய் நியமிக்காதீர்கள். அவ்விதம் செய்வீர்களாயின் அப்பெண்களுக்கு உடனே வருவது நாசமே. நிலைமை இப்படியிருந்தால் எங்ஙனம் கல்வி வளர்ச்சி ஏற்படும்? இவ்விதமாக வாழ்ந்துவரும் ஜனங்கள் ஏன் இளம் பிராயத்திலேயே இறந்துபோக மாட்டார்கள்? இதுதான் ஜனங்களுடைய வறுமைக்குக் காரணம் பிரிட்டிஷார் அரசாண்டாலுஞ் சரி ; ருஷியர்களோ ஜப்பானியர்களோ, அரசாண்டாலும் சரி ; அதைப்பற்றி நாம் இப்பொழுது ஆராய வேண்டுவதில்லை. அல்லது பண்டைக் காலத்திருந்தது போல் தங்களுக்குள் தேசத்தைப் பங்குபோட்டுக்கொண்டு சுதேச மன்னர்கள் ஆண்டாலும் சரி; அல்லது இப்பொழுதிருக்கும் அரசியல் முறை போய் எம்மாதிரி சுய ஆட்சி வந்தாலும் சரி. இப்பொழுது இந்தியா விடுதலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் வேகத்தைவிட அதிகமான வேகத்துடன் செல்ல வேண்டுமாயின் சுருங்கச் சொல்லின், இந்தியா பூரண விடுதலை யடைய வேண்டுமாயின், வெறும் பேச்சுப் பேசுவதையும், ஒருவரை யொருவர் குறைகூறிக் கொள்வதையும் இன்றோடு ஒழித்துவிட்டு எல்லோரும் தங்கள் தங்களிடமுள்ள அசுத்தங்களை முதலில் நீக்கவேண்டும் ; தங்கள் மனோவாக்குக் காயங்களை முதலில் பரிசுத்தம் செய்ய முன் வரவேண்டும்.''

கன்னிமேயோவின் நன்மைக்காகவே, அவரது நூலிலிருந்து மேலே கூறிய பாகங்களை விரிவாக எடுத்தாண்டிருக்கிறோம்.

இந்தியர்களாகிய நாம், நமது ஒற்றுமைக் கேட்டினாலும், மடமையாலும் வெளி நாட்டாரை ஆள அழைத்தோ மென்றும், அந்த அரசாட்சியினால் நாம் சீர்குலைந்து, தேக வலிகுன்றி, ஊக்கமற்று, நமது வளர்ச்சிக்கும் தேசீய முன்னேற்றத்துக்கும் தடை யேற்படுமாயின் அதற்கு நாமே ஜவாபதாரிகள் என்றும் கன்னிமேயோ கூறுவதானால் அது ஒருவாறு சரியாகத் தோற்றலாம்! கன்னிமேயோவின் வாதப் போக்கு அத்தகையதாகக் காணவில்லை. அத்தகையதானால் அதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். வாஸ்தவத்தில் அந்தவாதம் அவ்வளவு பலமா யிருப்பதினாலேயே, நாம் அன்னிய ஆட்சியைத் தொலைத்து விட்டு, சுயேச்சை யடைந்து, நமதிஷ்டப்படி முன்னேற்றமடைய விரும்புகின்றோம்.

ஆனால் கன்னி மேயோ வேறுவிதமாக நியாயம் கூறுவதாகத் தோற்றுகிறது. அவரது அபிப்பிராயத்தில் நமது பலவீனத்துக்கும்

திக்கற்ற தன்மைக்கும் தற்கால அரசியல் நிலை காரண மாகாதாம். ஒரு தேசத்தாரின் தொழிலாற்றும் சக்தியும், ஊக்கமும் அத்தேசத்து அரசியல் நிலையைப் பொறுத்து நிற்கவில்லையாம். கல்விப்பயிற்சி, சுகாதாரம், தேசமக்கள் திராணி முதலியன, அத்தேச சட்டசபைப் போக்கையும், அரசியல் நிலைமையையும் அடிப்படையாகக் கொண்டதன்றோ? இவையாவும் கன்னிமேயோ கருதுகிறபடி சமூதாயப்பழக்க வழக்கங்களை மட்டுமா தழுவி நிற்கின்றன? உண்மையில், ஒரு தேசத்தின் அரசியல் முறையையும், தேச மக்களின் கல்வியறிவையும் ஒட்டியன்றோ சமூதாயப்பழக்க வழக்கங்கள் உருப்பெறுகின்றன.

தான் கூறும் நியாயத்தை நிலைநாட்டுவதற்காக, இல்லாத சில விஷயங்களை உள்ளதாக, கன்னிமேயோ நம்பிக்கொள்கிறார். அவைகளுக்கெல்லாம் ஆதாரமாக நமது புராதன சரித்திரங்களையும் சுட்டிக் காட்டுகிறார். ஆனால் நமது பூர்வ சரித்திரங்களைப் பற்றி அவருக்குக் கடுகளவு ஞானமும் கிடையாது. அன்றியும் அன்னிய அரசாட்சிக்கு அடிமைப் பட்டுழலும் ஒரு நாட்டாருக்கு, அவ்வடிமைத்தனத்தினால் சமூக ஆத்மீக வாழ்க்கைக் குண்டாகும் பலாபலன்களையும் அவர் முற்றிலும் புறக்கணித்து விடுகிறார். இவ்வுண்மையை அவர் மெல்லக் கை நழுவ விட்டு விட்டு, மேலெழுந்த வாரியாக வாதம் செய்து மழுப்புவதுதான் மிக விநோதமாக இருக்கிறது.

ஆசிரியர் மன்ஸ்டன் பர்க் என்பார், தமது 'அமெரிக்கர்' என்னும் நூலில் பின் வருமாறு கூறியிருக்கிறார்.

"அற்ப சொற்பப் படிப்புடைய அமெரிக்க மாதர்கள் சர்வஞ்ஞானிகளென்று தம்மைத் தாமே மதித்துக்கொள்கிறார்கள். அறிவாராய்ச்சித் துறையில் பெண்கள் ஆதிக்கம் மிகுந்தால் உண்டாகும் ஆபத்துகளையே இத்தகைய பெண்களின் மனப்பான்மை விளக்கிக் காட்டுகின்றன".

கன்னி மேயோவைப் பார்த்துத்தான் ஆசிரியர் மன்ஸ்டன் பர்க்கு இவ்வாறு அபிப்பிராயப்பட்டாரா?

12 வயதுடைய ஒரு பெண் எலும்பும் தோலுமாயிருக்கக் காரணமென்ன வென்று கன்னிமேயோ கேட்கின்றார்.

அக்குறைபாடு (1) பரம்பரைக் காரணத்தினாலும் (2) போதுமான உணவின்மையாலும் (3) சுகாதார சௌகரியங்கள் இன்மையாலும் (4) கல்விப்பயிற்சி யில்லாமையாலும் அறியாமையானும் ஏற்படலாம்.

தொடரும்.

இயந்திர விபத்து

அமெரிக்காவில் மூன்று ஆண்டு வசித்து விட்டுச் சமீபத்தில் இங்கிலாந்து திரும்பியிருக்கும் "தார்" என்னும் புனை பெயர் கொண்ட பிரபல பிரிட்டிஷ் ஆசிரியர் "டிட்பிட்ஸ்" பத்திரிகையில் வரைந்திருக்கும் ஒரு கட்டுரையின் சாரமாவது :—

சமீபத்தில் ஒரு நாள் ஐம்பது ஸ்திரீகள் உள்ளிட்ட முன்னூறு பேர் நியூயார்க்கில் ஒரு தொழிற் சாலையை முற்றுகை யிட்டு வேலை வேண்டுமென்று கூச்சலிட்டார்கள். குபேர புரியில் பிடிசோற்றுக்குத் தவித்தார்களென்றால் அஃது ஆச்சரியமன்றோ? உலகிலேயே பணம் பெருத்த நாடு என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் அமெரிக்க ஐக்ய இராஜ்யத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தின் கொடுமை தோன்றத் தொடங்கி யிருக்கிறது.

அமெரிக்க ஐக்ய இராஜ்யத்தில் தற்போது 40 லட்சம் பேர் வேலையில்லாத் திண்டாட்டத்துக்கு ஆளாகியிருக்கிறார்கள். நியூயார்க்கில் அரசாங்க அறச்சாலைகளில் ஒரு துண்டு ரொட்டிக்காக மக்கள் வரிசை வரிசையாகக் காத்திருக்கும் காட்சியை இன்று காணலாம். என்ன விந்தை பாருங்கள் ! 15 கோடி டாலர் சினிமா படங்களுக்கும், தங்கக் கூரை போட்ட ஆகாயமளாவும் மாளிகைகளுக்கும் பெயர்போன நியூயார்க்கில் அன்றாடம் வயிறு நிரப்ப வழியறியாத பிச்சைக்காரர்கள் ! இலவசமாகப் படுக்க இடந்தரும் தர்ம சத்திரங்களில் கூடும் கூட்டம் சொல்லமுடியாது. முன் காலத்தில் அடிமைகள் ஏலத்தில் விற்கப்பட்டது போல் வேலையில்லாத் திண்டாட்டத்துக் காளான தொழிலாளரின் உழைப்பு 'ஏலம்' போடவும் படுகிறது.

அமெரிக்க ஐக்ய இராஜ்யத்தில் வேலையில்லாதவர்கள் 40 லட்சம் பேர் ! இம்மாதிரி நிலைமை இதற்கு முன் அங்கு ஏற்பட்டதே கிடையாது. அங்கே வேலை யில்லாதவர்கள் இருந்ததுண்டு. ஆனால் அஃது ஒரு திண்டாட்டமானதில்லை. தொழிலாளர் ஓரிடத்திலிருந்து ஓரிடம் பெயர்ந்து கொண்டிருந்ததுண்டு ; ஆனால் அதிகப்படியான தொழிலாளர் எப்போது மிருந்ததில்லை. தொடரும்.

லக்ஷ்மி

சந்தா விவரங்கள்.

இந்தியா, பர்மா, ஸிலோன் போன்ற உள் நாடுகளுக்கு வருட சந்தா	ரூ. 2 0 0
தென்னுபிரிகா, மலாய் நாடு, போன்ற வெளி நாடுகளுக்கு வருட சந்தா	ரூ. 2 8 0
ஜீவிய சந்தா (உள் நாடுகளுக்கு)	ரூ. 40 0 0
ஷை (வெளி நாடுகளுக்கு)	ரூ. 50 0 0

விளம்பர விகிதங்கள்.

முழுப்பக்கம்	(மாதம் 1-க்கு)	ரூ. 8 0 0
அரைப்பக்கம்	ஷை	ரூ. 4 0 0
கால்பக்கம்	ஷை	ரூ. 2 8 0

சிறந்த வாசனை

ஊது துவத்திகள் !

உயர்ந்த வாசனைத் திரவியங்களால், நவாப் தர்பாரில் கியாதி பெற்ற ஒருவரால் செய்யப்பட்டவை. இந்த வத்திகளை ஒரு முறை தருவித்து உபயோகித்துப் பார்ப்பீர்களாகில், மற்ற எந்த விதமான வத்திகளையும் வாங்க மாட்டீர்கள் என்று நிச்சயமாய் சொல்லுவோம். இன்றே ஆர்டர் செய்யுங்கள் ! சேர் ஒன்றுக்கு 24 ரூ. எடை. எட்டுக் கட்டுகளுடையது.

சவ்வாது வத்தி	சேர் 1-க்கு	6—0—0
அம்பர் வத்தி	,, 1-க்கு	5—0—0
கிலீட் வத்தி	,, 1-க்கு	3—8—0
மட்டிப்பால் வத்தி	,, 1-க்கு	2—0—0

K. S. MUTHIAH & Co.,

EXPORT DEPARTMENT,

Post Box No. 99, MADRAS.

குழந்தைகளை : : : : நேசியுங்கள்!

அழுகிற குழந்தைகளை அடிக்கவேண்டாம். உங்கள் அருமைக்குழந்தைகளை, எப்பொழுதும் குதூகலப்படுத்த நமது "விளையாட்டு சாமான்கள்" செட் ஒன்றை வாங்கிக் கொடுங்கள். குழந்தைகளின் மனதை ரம்மிக்கச் செய்யும், இந்தியர்களின் வீட்டில், சமையல் செய்யும் பாத்திரங்களைப்போன்றவடிவுள்ளவை, ஒவ்வொரு ஜோடிப்பிலும் 32 சாமான்கள் அடங்கியிருக்கின்றன, அவை முற்றிலும் பித்தளையினால் செய்யப்பட்டு, மிகுந்த அழகோடிருக்கும். இந்த விளையாட்டு சாமான்கள், இந்துக்களாலும், மகமதியர்களாலும், கிறிஸ்தவர்களாலும், ஆங்கிலேயர்களாலும் மதிக்கப் பெற்றவை

நெ. 1 செட் 1-க்கு விலை ரூ. 4—8—0

நெ. 2 ,, ,, விலை ரூ. 3—4—0

கே. எஸ். முத்தையா கம்பெனி,

ஸில்க் ஹவுஸ் : :: காசி

30 வருடகாலமாய் உலக பிரசித்தி பெற்ற

வைத்யரத்ன பண்டிட் D. கோபாலாச்சார்லு அவர்களின்

ஆரோக்கியத்தையும், தைரியத்தையும், உண்டாக்கும்.

ஜீவாமிருதம்

பலத்தையும் உற்சாஹத்தையும், விருத்தியாக்கும்.

ரத்தத்தை விருத்தியாக்கும், மேகவாதநோய்களை போக்கடிக்கும், எல்லாவித பலஹீனங்களையும் போக்கும்ரோகிகளுக்கு நல்லது, மாரதிர்ச்சியை போக்கும், கற்பகாரகங்களை நீக்கும், குழந்தைகளுக்கும் கர்பவதிகளுக்கும் உத்தமம், முலைப்பாலை விருத்தியாக்கும், மூர்ச்சைகளுக்கு நல்லது மூளைக்கு வலுவை யுண்டாக்கும், நரம்புகளுக்கு வலிவை ஜாஸ்தி கொடுக்கும், வித்யார்த்திகளுக்கு பிராணமித்திர மானது, பிராண சக்தியை ஜாஸ்தியாக்கும் க்ஷய ரோகிகளுக்கு மிகவும் நன்று, காஸரோகிகளுக்கு அமுர்தம் போன்றது, மாருக்கு அதிகபலத்தை கொடுக்கும், ஸ்வாசப்பைகளுக்கு அதிக பலமுண்டாக்கும், உப், பல ரோகிகளுக்கு ரெம்பவும் ஹிதம்.

ஹிந்து தேசத்தில் நல்ல மூலிகைகளாலும், லோஹங்களாலும் தயார் செய்யப்பட்டது.

விலை புட்டி 1-க்கு ரூபா 3—4—0.

உபயோகவிதி மருந்துடனனுப்பப்படும்.

முழுவிபரம் அடங்கிய கேட்லாக் இனமாய் அளிக்கப்படும்.

ஆயுர்வேதாஸ்ரமம்,

151, கோவிந்தப்பநாய்க்கன் தெரு, **Post Box 287, Madras.**

ஹா முனியோஸா

சில்க் அங்கவஸ்திரம்.

அழகான இமிட்டேஷன் சில்க், கலருக்கு உத்திரவாமத வண்ணானுக்குப் போடலாம். நேர்த்தியான பட்டுக்குஞ்சம் கட்டியது. பச்சை, ரோஸ், ஆரஞ்சு, வெள்ளை, பிங், புளூ முதலிய பல கலர்கள்.

5 முழம் பட்டு 1-க்கு விலை ரூபா 2—4—0.

விலை ரூபாய் இரண்டேகால்தான். உடனே எழுதுங்கள்.

☞ இதுவரை, 6-மாதத்திற்குள் 50,000, அங்கவஸ்திரங்கள் விற்பனையாகி யிருக்கின்றன. ஒன்று வாங்கினவர்கள் திரும்ப மறு ஆர்டர் ஒரு டஜனுக்குச் செய்கிறார்கள்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,

தபால் பெட்டி 99, சென்னை

நூல் புடவையிலும் ஓர் நூதனம்!

கராச்சி நூல் புடவைகள்

அழகான ஜரிகை முகதலையுடன் கூடியது. தினசரி சலவை செய்து உபயோகிக்கலாம், ரூ. 80—100—விலையுள்ள புடவைகளிலிருக்கும், கரைகள்போல் ஜரிகையினால் கொடி செடி போட்டது. சிகப்பு, அரக்கு, பச்சை, கருப்பு, புளூ, ஸ்னப் முதலிய கலர்கள். கலருக்கு உத்திரவாதம்.

18 மு $\times 2\frac{1}{2}$ அகலம் புடவை 1-க்கு விலை ரூ. 12.

K. S. Muthiah & Co.

Post Box 99, : : MADRAS.

A. S.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள்.

ஒரு சிட்டிகை எடுத்து காலணு மூக்குத்தூளுடன் கலந்தால் அதிக இன்பமான சுகந்த வாசனையைத் தரும். கண்டத்துக்குமேற்பட்ட 96 வியாதிகளைக் சண்டிக்கும். இந்தத் தூள் எக்காலமும் கெடாது. எந்தக் கம்பெனிகளிலாவது வாங்குபவர்கள் எ. எஸ். மார்க்கைக் கவனித்து வாங்கவும்.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணு 4 ஷை டஜன் 1-க்கு ரூ. 2-4 ஷை சேர் 1-க்கு ரூ. 3.

எம். ஜெ. பரிமள மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணு 3 ஷை டஜன் 1-க்கு ரூ. 2 ஷை சேர் 1-க்கு ரூ. 1-8.

பொன் வெள்ளி மெடல்கள் பெற்ற

எ. எஸ். முகம்மத் சம்சுத்தீன் சாயபு,

106, சவுக்கார் பேட்டை, தபால் பெட்டி நெ. 1201, மதறாஸ்.

கையிலிருந்தாலும் அழகு !

பன்னிரு இதழ்களையும் ஒன்ருய்ச் சேர்த்து பைண்ட் செய்யப்பட்ட "லக்ஷ்மி" ஆண், பெண், சிறியோர், பெரியோர் முதலிய யாவரும் படித்து இன்புறக்கூடிய, கதைகள், நாவல்கள், பாடல்கள், ஹாஸ்யக் குறிப்புகள் முதலியவை அடங்கி யிருக்கின்றன. லக்ஷ்மியின் சந்தா நேயர்களுக்கும் பயன்படக்கூடியது. இன்றே ஒன்றுக்கு ஆர்டர் செய்து வரவழைத்து, உங்கள் வாசக சாலையை அழகுப்படுத்துங்கள்.

1-வது வால்யம்	விலை ரூ. 3—0—0.
3-வது வால்யம்	விலை ரூ. 3—0—0.

லக்ஷ்மி ஆபீஸ்,

தபால் பெட்டி, :: :: சென்னை.

தென்னிந்தியாவில் நிகரற்ற,

ஆதிபரிமளச்சாலை.

(1800-ம்-வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது)

இது இராஜக்கள், ஜமீன்தார்கள், கோடீஸ்வரர்கள் ஜனத்தலைவர்கள் டாக்டர்கள், வியாபாரிகள் முதலியோரால் ஆதரிக்கப்பட்டது.

K. தாவுத் ஸாஹிப்.

இவர், அனேக கண்காக்ஷிகளில் தங்கம், வெள்ளி மெடல்கள் பரிசளிப்பும் நற்சாக்ஷிப் பத்திரங்களும், சென்னை எச். ஈ. தி. கவர்னரவர்களின் நன்கு மதிப்பும், அநேக கனவான்களின் நற்சாக்ஷி சோதனை பத்திரங்களும் பெற்று மான் மார்க்கு அடையாளமுடன் அடியிற்கண்டுள்ள சகல வாஸனை திரவியங்களால் நற்கியாதியும் பெற்றவர்.

வாஸனை சாமான்களின் விபரம்: உலகப்பிரசித்திபெற்ற,

ஆதி சந்தனாதித் தைலம்.

இது மூளைக்காதாரமானது. ஜெகத்தோர் மெச்சும்,

அரைக்கீரைவிதைத் தைலம்.

இது பித்தோஷ்ண நிவாரணி.

இவையன்றி, மேலானவாசனை யுள்ளவைகளாவன:—ஜவ்வாது, புனுகு, அறகஜா, அம்பர், பலவித வில்லை தினுசுகள், தூரதேச அத்தர் வகைகள், கஸ்தூரி, அம்பர், ஜவ்வாது பன்னீர், புனுகு அகர் முதலிய பத்தி தினுசுகள், மேல்நாடுகளின் ஸெண்ட் தினுசுகள், கூந்தல் வளர் தைலங்கள், பன்னீர் வகைகளும், சந்தன வில்லை, பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ, கோரோசனை. அற்புத பற்பொடி, சந்தனப் பவுடர், கேஸரி பவுடர், தஸாங்கம், விலைக்கேற்ற கலப்பு சந்தனம், குல்கந்து பருவுநிவாரணி. வாசனைப் பாக்கு. சுண்ணாம்பு, கொப்பரைச் சீவல், ஸ்நானப் பவுடர், தங்கம் வெள்ளி ரேக்க மைந்த எலங் கிராம்பு வகையரு, சுருள் நைஸ் கொட்டைப் பாக்கு சீவல், மதுரைப்பிள்ளை ஊறுகாய் முதலியவைகள் மான் மார்க்கு அடையாளமுடன் எங்களிடம் கிடைக்கும்.

விபரமான காட்லாக் தேவையானால் கிடைக்கும், பல இடங்களில் தகுந்த ஏஜண்டுகள் தேவை. ஒருமுறை வாங்கி பரீக்ஷித்துப் பாருங்கள்,

K. தாவுத் ஸாஹிப் அண்டு ஸன்ஸ்

தந்தி விலாசம்:—"ஸெண்ட்மால்."

ஆதிபரிமளச் சாலை, 311, பெரியகடைத்தெரு, கும்பகோணம்.

மனோஹரி.

அழகியதோர் கதை. இதில் விக்கரமகேதுவின் தீச்செயலால் "கெடுவான் கேடு நினைப்பான்" என்பதையும், மனோஹரி என்னும் பெண் தன் தகப்பனார் கிழட்டு அரசனுக்கு மணம் செய்து விக்கப் போனார் என்பதைக் கேள்விப்பட்டு தனது நந்தவனத்தின் பக்கம் வந்த குணசீலன் என்ற வேறொரு நாட்டு இளவரசனுடன் ஆண் வேடம் பூண்டு இரவு 12 மணிக்கு பின் பற்றிச் செல்வதும் நந்தவனத்தில் வைத்து காதலர்கள் இருவருக்கும் நடந்த சம்பாஷணைகளின் பேரில் இருவரும் காதலித்துக் கொண்டவைகளையும் படிக்கப்படிக்க மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கும்.

விலை அணா 0—8—0.

மணிவடக்களவு

பட்டப்பகலில் போலீசார் முன்னே ஒரு இரத்தினமாலையை திருடி மறைந்த ஒரு சுந்தரமாதின் தந்திரச் செயல்களை விளக்கும் ஓர் அற்புதமான துப்பறியும் கதை.

விலை அணா 0—4—0.

மோட்டார் வண்டிகட்கு

யூனிவெர்ஸல் பாட்ரி



பாட்ரி வேண்டும் போது அமெரிக்காவில் செய்யப்படும் பாட்ரிகளில் தலைமை ஸ்தானத்தை வகிக்கும் யூனிவேர்ஸல் பாட்ரி வாங்குங்கள். நாங்கள் உத்திரவாதம் எழுதித் தருகிறோம்.

இந்தியாவுக்கு சோல் ஏஜண்ட்கள் :—

ஸ்டாண்டர்ட் மோட்டர் எலெக்ட்ரிக் ஒர்க்ஸ்

மோட்டர் எலக்ட்ரிக் எஞ்சினீயர்கள், 33, மவுண்ட்ரோட், சென்னை

80-வருஷ காலமாக உலக பிரசித்திபெற்ற

அசல்



காரம் மணம் நிறம் குணம் வாடை உள்ளது.

அநேக மெடல்கள் நற்சாட்சி பத்திரங் ள் பெற்றது.

ஷண்முகம்

பட்டணம்பொடி

ஷண்முகம் மூக்குத்தூள் கம்பெனி லிமிடெட,
போஸ்டு பாக்ஸ் 140, மதராஸ்.

80 வருஷக் காலமாக சென்னையிலே சிறப்பு வாய்ந்து ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்று தினசரி லெட்டர்களால் புகழ்பெற்று அன்றாடம் நூற்றுக் கணக்கான பார்சல்களை சோல் ஏஜண்டுகள் தினதோறும் மெயிலில் பெற்று, ஜில்லா, தாலூக்கா, டவுன், கிராமம் முதல் குக்கராமங்களிலும் கொண்டாடி, அசல் சேப்ரோல் வாடை, அசல் பசும் நெய் மணம், குளிர்ந்த குணம். இன்புறும் காரம், பவுன் நிறம் மனோரம்மியம் இவ்வாறும் ஒருங்கே அமையப் பெற்றதினால் ஷண்முகம் என பெயர் பெற்று நமது ஏஜண்டுகளுக்கு நற்கியாதி தந்து வியாபாரிகளுக்கு நற்பெயரளித்து உபயோகப்படுத்திய கனவான்களுக்கு மனோ பீஷ்டம் தந்து இந்தியாவில் ஏராளமாக செலவாகி வருவது எது? எங்கள் அசல் ஷண்முகம் பொடியை வாங்கி உபயோகப்படுத்தி இன்புறுங்கள்!

பலம்.		விலை.			தபால்சிலவு.			பாக்கிங்.			மொத்தம்.		
8	ரூ.	1	0	0	0	5	0	0	1	0	1	6	0
20	,,	1	12	0	0	8	0	0	2	0	2	6	0

டாக்டர். ஆர். கே. பரிமள மூக்குத்தூள். இதனால் ஜலதோஷம், ஒற்றைத் தலைவலி, மண்டைகுததல், உள்பட கண்டத்திற்கு மேற்பட்ட 103 சகல வியாதிகள் வெகு சீக்கிரத்தில் கண்டிக்கப்படுமென்பதில் சந்தேகமே கிடையாது. காலணா சாதா மூக்குத் தூளுடன் இந்தத் தூள் இரண்டொரு சிட்டிகை மாத்திரம் கலந்தால் தூள் முழுவதும் சுகந்தமாய் விடும்.

1-புட்டி 1-க்கு அணா 4. டசன் புட்டிகள் ரூ. 2-4-0.
ஒரு சேர் டின் ரூ. 1-8-0.

இதர சாமான்கள் வேண்டுமானால் எங்களுக்கு விலை விபரம் எழுதவும்.

ஷண்முகம் மூக்குத்தூள் கம்பனி, (லிமிடெட்)
போஸ்டு பாக்ஸ் 140, மதராஸ்.

தமிழ்நாடு
20378

ராச்சி பேட்டர்ன் சில்க் புடவை

இந்தப் புடவையின் உடல் சாதா, விளிம்புக் கரைக்கு ரிகையினுல் "கிளாவர்" "உத்ராக்ஷம்" "சங்கிலித் தாடர்" முதலியவை மாதிரி நெசவு செய்தது. முக லேக்கு 4" ஜரிகை பட்டைக் கரை யுள்ளது. சிறிய கரை புள்ள புடவைகளை விரும்பும் ஸ்திரீகளுக்கு இந்தப் புடவை மிகுந்த திருப்தியையும், சந்தோஷத்தையும் கொடுக்கு மென்பதில் சந்தேகமில்லை!

No. 1.	16 மு x 44 இஞ்சி புடவை	1	ரூ.	38—0...0
	18 மு x 44 இஞ்சி ,,	1	ரூ.	44—0—0
No. 2.	16 மு x 44 இஞ்சி ,,	1	ரூ.	30—0—0
	18 மு x 44 இஞ்சி ,,	1	ரூ.	36—0—0

பெங்களூர் பேட்டர்ன் புடவை

பெங்களூர் புடவை மாதிரி 4 கரையும் முகதலையு முள்ளது. உடல் நெசவு அழுத்தமா யிருப்பதோடு, மிருதுவாகவும், பளபளப்பாயு மிருக்கும். கரையில் இரட்டை ஜரிகை உத்ராக்ஷம் திராக்ஷைக் கொடி (Lacha) முதலியவை நெசவு செய்யப்பட்டது.

16 மு x 44 இஞ்சி புடவை	1	ரூ.	52—0—0
18 மு x 44 இஞ்சி ,,	1	ரூ.	60—0—0

இன்றே ஆர்டர் செய்யுங்கள்.

K. S. MUTHIAH & CO.,

EXPORT DEPARTMENT

Post Box 99, **MADRAS.**

Show room 287, Esplanade. *Phone: No. 2693.*

முத்தையாஸ் -

- நியூமாடல் புடவை

ஒன்று வாங்க மறந்துவிடாதீர்கள்

நவீன நாகரீகத்திற் கேற்ற மாதிரியில் புதிதாகச் செய்யப்பட்ட புடவை. அழகான 1-அல்லது $1\frac{1}{2}$ இஞ்சி ஜரிகை வேலைக் கரையுடனும், 6 முதல் 8 அங்குலம் வரையுள்ள ஜரிகை முந்தாணியுடனும் கூடியது. கண்ணைக் கவரும் பிங், ரோஸ், பச்சை, கத்தரிப்பூ, ஊதா, வெள்ளை, ஸ்கைப்புளு முதலிய பல கலர்களில் கிடைக்கும். உடல் அழுத்தமாகவும், நைஸாகவும், பளபளப்பாகவும், நீடித்த உபயோகிப்பிற்கு வரக் கூடியதாயு மிருக்கும்.

16 மு x 44'' புடவை 1-க்கு ரூ. 45 முதல் 80 வரை.

K. S. MUTHIAH & CO.,

EXPORT DEPARTMENT

Post Box 99, . . . MADRAS.

Show room: 287, Esplanade. *Phone: No. 2693.*

Printed at Muthiah Press, Madras and Published by K. S. Sundarar.